மொழிக்கு மொழி தித்திக்கும்

மூவர் தமிழ் மாலை

மாலை—10



உரையாசிரியர்:
ஆங்கீரஸ S. வேங்கடேச சர்மா

விநாயகர் துதி



திருச்சிற்றம்பலம்

பிடியதன் உருஉமை கொளமிகு கரியது
வடிகொடு தனதடி வழிபடும் அவரிடர்
கடிகண பதிவர அருளினன் மிகுகொடை
வடிவினர் பயில்வலி வலமுறை இறையே.

திருச்சிற்றம்பலம்

பொருளடக்கம்

உ

சிவமயம்

சிவனுண்டு பயமில்லை

மொழிக்கு மொழி தித்திக்கும்

மூவர் தமிழ் மாலை

(சம்பந்தர், அப்பர், சுந்தரர் அருளிச் செய்த தேவாரத் திருப்பதிக வெளியீடு)

மாலை—10

உரையாசிரியர் :

சிவபுராண ஞானபூஜகர், சாஸ்த்ர பிரசார பூஷணம்,
சிவபுராணக் காவலர், சிவபுராணச் சக்கரவர்த்தி,

ஆங்கீரஸ சு. வேங்கடேச சர்மா

(சங்கரன் அடிமை)



வெளியீடு : 21-5-1981
துன்மதி வைகாசி மூலம்
திருஞானசம்பந்தர் குரு பூசை

பிரசுரம் :

ஆங்கீரஸ சு. வேங்கடேச சர்மா

5, டெலிபோஸ்ட் காலனி குறுக்குத் தெரு,
மேலமாம்பலம், சென்னை-600 033.

 1981 [விலை ரூ. 3-00

உ

சைவ சமயாசாரியர்

நால்வர் துதி



திருஞான சம்பந்தர் | திருநாவுக் கரசர் | சுந்தர மூர்த்திகள் | மாணிக்க வாசகர்

பூழியர்கோன் வெப்பொழித்த புகலியர்கோன் கழல்போற்றி
ஆழிமிசைக் கல்மிதப்பில் அணைந்தபிரான் அடிபோற்றி
வாழிதிரு நாவலூர் வன்றொண்டர் பதம்போற்றி
ஊழிமலி திருவாத வூரர்திருத் தாள்போற்றி.

சொற்கோவும் தோணிபுரத் தோன்றலும் நம்சுந்தரனும்
சிற்கோல வாதவூர்த் தேசிகனும்—முற்கோலி
வந்திலரேல் நீறெங்கே மாமறைநூல் தானெங்கே
எந்தைபிரான் ஐந்தெழுத்தெங் கே.

திருஞானசம்பந்தர்



மறைவளர் திரு, வைதிகநிலே, வளர்ஞானப்
பொறையணி முகில், புகலியர் புகல்,
பொருபொன்னித் துறைபெறு மணி,
சுருதியின் ஒளி
திருஞானசம்பந்தர்

உ

சிவமயம்

ஸமர்ப்பணம்

ஓம் சங்கராய நம:

சிவபெருமானுடைய 108 திருநாமங்களில் பத்தாவது திருநாமம் சங்கரன் என்பதாம். "சம் கரோதி இதி சங்கர:" அதாவது 'சம்'-சுகத்தை, கரோதி-செய்கிருர் இதி-என்னும் காரணத்தால் சங்கர:- சங்கரர் என அழைக்கப்படுகின்ருர் என்பது இதன் கருத்தாகும். சுகத்தைக் கொடுக்கும் தன்மை சிவனுரிடமே முழுமையாக இருப்பதால் சங்கரர் என்றும் லோகசங்கரர் என்றும் போந்த திருநாமங்கள் இவருக்கே சிறப்பாகக் காரண இடுகுறிப் பெயராக வழங்கிவருகின்றன. இன்பந் தருதலில் சங்கரன் எனத் தமிழ்ச் சான்ருேர்களும் இப்பெயர்க் காரணத்தை விதந்து கூறினர்.

சிவநாமங்களைத் தொகுத்துக் கூறுமிடத்தில் அமர கோசம் என்ற வடமொழி நிகண்டுவில் "ஈச்வர: சர்வ ஈசான: சங்கர: சந்த்ரசேகர:" என வருமிடத்தில் சங்கர: என்ற பெயர் வருகிறது. இப்பெயருக்குச் சிவபிரானுரைத் தவிர வேறு எந்த மூர்த்தியும் பொருளாகார் என்பதை எளிதில் உணரலாம். சங்கரர் தமது அடியார்க்கருளுவது சாதாரண மான இம்மைச் சுகமேயன்றி நித்தியமான பேரின்பமான சுகத்தையும் அருளுகின்ருர். சிவபிரானது இத்தகைய சுக மளிக்கும் செயலைத் திருஞானசம்பந்தர் அருளியுள்ள திருப் பதிகங்களில் காணலாம். அத்தகைய சிறப்புப் பதிகங்கள் சில அடங்கிய இந்த 10-வது ஞானத்தமிழ்மாலையினை நித்திய மான சுகத்தை அடையவேண்டி ஓம் சங்கராய நம: என்ற பத்தாவது திருநாம மந்திரத்தால் அருச்சித்துச் சிவ பிரானுக்கு அணிவிக்கும் நற்பேறு முந்தைப் பலபிறவிகளின் புண்ணியத்தாலும், பெற்ருேர்களது புண்ணியத்தாலும் பெறுகின்றேன்.

ஆங்கீரஸ வேங்கடேச சர்மா
உரையாசிரியர்

சிவம்

5-2

உ
சிவமயம்
சிவனுண்டு பயமில்லை

உரையாசிரியர் பணிவுரை

திருச்சிற்றம்பலம்

தொண்டினம் சூழச் சுரிகுழ லார்தம் மனம்தொடர
வண்டினம் சூழ வருமிவன் போலும் மயில்உகுத்த
கண்தினம் சூழ்ந்த வளைபிரம் போர்கழு வாஉடலம்
விண்டினம் சூழக் கழுவின ஆக்கிய வித்தகனே.

திருச்சிற்றம்பலம்

—ஆளுடைய பிள்ளையார் திருவந்தாதி : 6
(11-ம் திருமுறை)

மயிற்பீலிகள் சூழ்ந்த பிரம்பினராகிய சமணர்களை வாதில் வென்று அவர்களது கழுவா உடலைக் கழுவின ஆக்கிய வித்தகன் அதாவது அவர்களைக் கழுமரங்களில் ஏறச்செய்த வித்தகன் (கழுவா உடலம்—நீரிட்டுக் கழுவாத உடலை, கழுவின ஆக்கிய-கழுவிய உடலாக ஆக்கிய வித்தகன் என்ற சொல் நயமும் காண்க) என்று நம்பியாண்டார் நம்பிகளால் துதிக்கப்பட்ட திருஞானசம்பந்தர் அருளிய திருப்பதிகங்களைப் பெரியபுராணத்தில் கண்ட வண்ணம் தல யாத்திரை முறையால் கும்பிட்டு வரும் நாம், இந்தப் பத்தாவது தமிழ் மாலையில் திருக்கருப்பறியலூர் திருப்பதிகம், சீகாழியில் உபநயனக் காலத்தில் அருளிச் செய்த பஞ்சாக்கரப் பதிகம். மற்றும் சீகாழியில் அருளிச்செய்த பதிகங்களில் சில பதிகங்கள் ஆகியவற்றைக் கும்பிடும் பேறு பெறுகின்றோம்.

உபநயனம் நடைபெற்ற பிறகு திருஞானசம்பந்தர் சீகாழியில் இருந்த போது திருநாவுக்கரசு சுவாமிகள் அங்கு

வருகின்றார். அவர்களுடைய முதல் சந்திப்புக்குப் பிறகு சில நாட்கள் சீகாழியில் தங்கிய திருநாவுக்கரசர் மேலும் தலங்களைத் தரிசிக்க விடைபெற்றுச் செல்கின்றார். திருநாவுக்கரசர் விடைபெற்றுச் சென்ற பின்னர் திருஞானசம்பந்தர் தமது அடுத்த தலயாத்திரையைத் தொடங்கு முன்னர் சில காலம் சீகாழியிலேயே எழுந்தருளியிருந்தார். அக்காலத்தில் பல பதிகங்கள் அங்கு அருளிச் செய்யப்பட்டதாகச் சேக்கிழார் பெருமான் கூறுகின்றார். பின்னரும் பாண்டிய நாட்டு விஜயத்துக்குப் பின் சீகாழியில் எழுந்தருளியிருந்த போது அடுத்த தலயாத்திரையினைத் தொடங்குமுன் பல பதிகங்களை அருளியதாகவும் பெரியபுராணம் கூறுகிறது. இப்பொழுது சீகாழிப் பதிகங்களாக நமக்குக் கிடைப்பன வற்றுள் வரலாறு தெரிந்த பதிகங்கள் போக எஞ்சியவற்றில் எவைஎவை எக்காலத்தில் பாடியருளியவை என அறியுமாறு இல்லை. எனவே வரலாறு தெரியாத சீகாழிப் பதிகங்கள் அனைத்தையும் அடுத்து வரும் சில தமிழ் மாலைகளில் ஒவ்வொன்றிலும் சில சில பதிகங்களாக வெளியிட்டுப் பின்னர் அவரது அடுத்த தலயாத்திரை தொடங்கப்படும் என்று தெரிவித்துக் கொள்கிறோம். இங்ஙனம் செய்யாக்கால், வரலாறு தெரியாத சீகாழிப்பதிகங்களை வெளியிட வாய்ப்பு ஏற்படாது போகும். அன்பர்கள் தொடர்ந்து சீகாழிப் பதிகங்களில் வரலாறு அறிய இயலாதவைகளை இனித் தொடரும் தமிழ் மாலைகளில் காணலாம். இது பற்றி மேலும் விளக்கத்தைச் **சீகாழிப் பதிகங்கள்** என்ற தலைப்பில் கொடுத்துள்ளோம்.

இதுவரை வெளியிடப்பட்ட தமிழ் மாலைகளை ஆதரித்து ஏற்றுக் கொண்டது போலவே இதனையும் இனி வரும் மாலைகளையும் சைவஉலகம் ஏற்றுக் கொள்ளுமாறு வேண்டுகிறோம்.

சிவம்

சிவமயம்
சிவனுண்டு பயமில்லை

இப்பதிப்பில் வந்துள்ள தலங்களின் விசேடங்கள்

(சுருக்கம்)

1. திருக்கருப்பறியலூர்

கருவைப் பறிக்கும் (பிறவி இல்லையாகச் செய்யும்) திருத்தலம் ஆகையால் திருக்கருப்பறியலூர் எனப் பெயர் பெற்ற இத்தலம் காவிரிக்கு வடகரையில் 27-வது தலமாகும். ஆதித்தன் (சூரியன்) வழிபட்டதால் ஆதித்தபுரி என்றும், சீகாழியைப் போலவே மலைக்கோயிலும் அதில் தோணியப்பர்—பெரியநாயகியும் (கர்ப்பஞானேசுவரர், கர்ப்பஞானேசுவரி என்றும் வழங்கப்படுகிறது) சட்டைநாதரும் எழுந்தருளியிருப்பதாலும், சீகாழிக்கு மேற்கே இருப்பதாலும் மேலைக்காழி என்றும் வழங்கப்படுகிறது. சூரியன் வழிபட்டதால் ஏற்பட்ட பெயரே தலைஞாயிறு என்ற வடிவில் தற்போது ஊரின் பெயராக பிரசித்தமாக வழங்கப்படுகிறது. மற்றும் முல்லை தலமரமாதலின் யூதிகாவனம் என்றும், பிறவிக்கு ஏதுவாய கன்மம் நாசமடைவதால் கன்மநாசபுரம் என்றும் இத்தலத்துக்குப் பெயர்கள் உள்ளன. திருஞானசம்பந்தர் பதிகத்திலும் சுந்தரர் பதிகத்திலும் கோயிலின் பெயர் கொகுடிக்கோயில் என்று கூறப்பட்டு உள்ளது. முல்லைக்கொடி தலமரமாதலின் அப்பெயர் பெற்றதாகக் கூறப்படுகிறது. கொகுடி என்பது ஒரு வகை முல்லையின் பெயர்.

எழுபத்திரண்டு முனிவர்கள் பூசித்த தலம். இந்திரன், இராவணன், அனுமன் முதலியோர் பூசித்துத் தாங்கள் செய்த சிவாபராதத்தினின்றும் நீங்கினர். அவர்களது அபராதம் பொறுத்தமையால் இறைவர் இங்கு அபராத

க்ஷமாபணேச்வரர் அதாவது குற்றம் பொறுத்த நாதர் என்ற திருப்பெயருடன் விளங்குகின்ருர். அம்பிகையின் திருநாமம் கோல்வளை நாயகி (விசித்ரவளாம்பிகா) என்பதாம்.

முன்னை வழிபட்ட அவர்களுடைய குற்றம் பொறுத்த தேயல்லாது இன்றும் தன்னை வழிபடுவோரது குற்றங்களைப் பொறுத்து அருள் செய்து கொண்டு இறைவர் இனிது வீற்றி ருக்கின்ருர். கொகுடிக் கோயில் சென்று குற்றம் பொறுத்த நாதனைக் கோல்வளையாளோடும் தரிசிக்கும் பேறு ஆசிரி யருக்கு 11-11-1980 செவ்வாய்க்கிழமை கிடைத்தது. மலைக்கோயிலில் உமா-மஹேச்வரரும் சட்டைநாதரும் கண்கொள்ளாக் காட்சி. "கண்டேனவர் திருப்பாதம் கண்டறியாதன கண்டேன்'' எனவே சொல்லத் தோன்று கிறது. இத்தலத்தை வழிபட்ட எழுபத்திரண்டு முனிவர் களில் அங்கிரஸ் என்ற முனிவரும் ஒருவர். எனவே அவ ருடைய மரபில் (கோத்திரத்தில்) பிறந்ததால் அடியேனுக் கும் இதனை வழிபடும் பேறு கிடைத்தது போலும்! திருத் தருமையாதீனத்துத் திருக்கோயில். எனவே அப்பெருமைக் கேற்பக் கோவில் மிக்க தூய்மையாகவும் அழகாகவும் பரா மரிக்கப்பட்டு வருகிறது. பூசைகளும் காலம்தவருது ஒழுங் காக நடைபெற்று வருகின்றன.

இத்தலத்தில் விநாயக தீர்த்தம், சூரிய தீர்த்தம், வசிட்ட தீர்த்தம், அனுமதீர்த்தம், நிம்பபுட்கரணி, சங்க புட்கரணி, பொற்ருமரை, செங்கழுநீர்த்தடாகம் என எட்டுத் தீர்த்தங்கள் உள்ளன. சூரியன் உண்டாக்கிய சூரியதீர்த்தத்தில் ஞாயிற்றுக்கிழமைகளில் நீராடுவது மிகச் சிறந்தது.

திருப்புன்கூரிலிருந்து சுமார் 4 கி.மீ. அளவில் மண்ணிப் பள்ளம் என்ற இடத்தையடைந்து அங்கிருந்து வடக்கே 1 கி.மீட்டர் சென்று இத்தலத்தையடையலாம். வைத்தீசு வரன் கோயிலிலிருந்து மேற்கே திருப்புன்கூர், திருநீடூர் வழியாக மாயூரம் செல்லும் பேருந்துச் சாலையில் சுமார்

7 கி.மீட்டர் சென்று **தலைஞாயிறு** என்ற பெயர்ப்பலகை உள்ள இடத்திலிருந்து வடமேற்காக சுமார் 2 கி.மீ. சென்ருலும் இத்தலத்தையடையலாம். மாயூரத்திலிருந்து வருவதானுல் அதே சாலையில் **பட்டவிருத்தி** என்ற இடத்திலிருந்து சுமார் 2 கி. மீட்டர் வடகிழக்காகச் சென்று அடையலாம். ஆனுல் திருஞானசம்பந்தப் பிள்ளையார் திருநாரையூர் தரிசித்து இத்தலம் வந்தனர் என்று பெரியபுராணத்தால் அறியப்படுதலால், அங்கிருந்து கொள்ளிடங்கடந்து தென் கிழக்காகச் சுமார் 6 கி. மீட்டர் தொலைவில் உள்ள **திருக்குரக்குக்கா** என்ற தலத்தையடைந்து அங்கிருந்து ஒரு கிலோ மீட்டர் தொலைவில் உள்ள இத்தலத்தையடைந் திருக்க வேண்டும் எனத் தெரிகிறது. இது கடினமானவழி. இக்காலம் பேருந்து வசதிகள் உள்ளமையால் அவைகளைப் பயன்படுத்தி அன்பர்கள் தரிசிக்க வேண்டிய திருத்தலங் களில் இதுவும் ஒன்ருகும்.

திருஞானசம்பந்தர் பதிகம் ஒன்றும், திருநாவுக்கரசர் பதிகம் ஒன்றும் ஆக இரண்டு திருப்பதிகங்கள் பெற்ற திருத் தலம். மருதூர் அம்பலவாணர் என்ற செந்தமிழ்ப்புலவர் சுமார் 250 ஆண்டுகட்கு முன் வாழ்ந்தவர் என்றும் அவர் திருத்தருமை ஆதீன 10வது குருமஹா சந்நிதானமான ஸ்ரீலஸ்ரீ சிவஞான தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகளின் திருவருள் பெற்றவர் என்றும், அவர் இயற்றிய இனிய 298 செந்தமிழ்ப் பாக்களாலான தலபுராணம் அச்சில் வெளிவந்துள்ளது என்றும் அறியப்படுகிறது. இதைத் தவிர திருத்தருமபுரம் ஆதீனத்தில் வெளியிட்ட திருக்கருப்பறியலூர்த் தல வரலாறும் மிகச் சிறப்பாக உள்ளது.

2. சீகாழி

தமிழ்மாலை—1ல் விரிவாகக் கொடுக்கப்பட்டுள்ளது. அங்குக் கண்டு கொள்க.

சிவம்

வல்லார் பிறப்பறுப்பர்!

வல்லார் பிறப்பறுப்பர் வண்மை நலங்கல்வி
நல்லா தரவின்ப ஞானங்கள்—எல்லாந்
திருஞான சம்பந்தன் சேவடியே என்னும்
ஒருஞான சம்பந்த முற்று.

—துறைமங்கலம் சிவப்பிரகாச சுவாமிகள்
அருளிய நால்வர் நான்மணி மாலை—37

துறைமங்கலம் சிவப்பிரகாச சுவாமிகள் இத்திருப் பாடலில் **வல்லார் பிறப்பறுப்பர்** எனக் கூறியருளியுள்ளார். உடனேயே நமக்கு எதை வல்லார் என அறியும் ஆவல் எழுவது இயற்கையேயல்லவா? அது யாது என்பதைக் காண்போம்.

மனிதர்கள் அடைய விரும்புவது பொருளும் அதனல் எய்திடும் புண்ணியமும், அப்புண்ணியத்தின் பயனுகிய இம்மை மறுமை இன்பங்களும், கல்வியும் அதனுல் எய்தும் அன்பும், அவ்வன்பின் பயனுகிய ஞானமுமேயன்றோ? இவை யாவுமே திருஞானசம்பந்தப் பெருமானின் செம்மையான திருவடிகளே என உறுதியாகக் கொள்ளும் ஒப்பற்றதான ஞானசம்பந்தத்தை அடைய வல்லவர்களே பிறப்பினை அறுக்கும் பேறு அடைவார்கள் என்பது மேற்கண்ட பாடலின் கருத்து. எனவே திருஞானசம்பந்தப் பெருமானின் திருவடிகளே அனைத்தும் அளிக்கவல்லது. இதை உணருவதே ஞானம். அது வரப்பெறுதலையுடையவர்களையே **வல்லார்** என்றும் அவர்களே **பிறப்பறுத்தற்குரியார்** என்றும் சுவாமிகள் கூறியருளியது கண்டு கொள்க.

சிவம்

உ

சிவமயம்

சிவனுண்டு பயமில்லை



மொழிக்கு மொழி தித்திக்கும் மூவர் தமிழ் மாலை—10

திருஞானசம்பந்தர் அருளியவை

(தொடர்ச்சி)

திருக்கருப்பறியலூர்

பதிக வரலாறு: நலமோங்கு செல்வத் திருநாரையூரில் சிவபெருமானை அருந்தமிழ் புனைந்து வழிபட்டு விருப்புடன் அங்குத் திருஞானசம்பந்தர் மேவிய நாட்களில், இறைவனார் கோயில் கொண்ட அழகிய பதிகள் பலவற்றையும் முன் சென்று பணிந்தனர். பின்னர் பாம்பினையணிந்த பெருமானது திருக்கருப்பறியலூர் சென்று சேர்ந்தனர். சிரபுரச் செல்வர் அங்குச் சிவபிரானைக் கைதொழுது பாடிய உரை இசை மாலை இதுவாகும்,

பரமர்தந் திருக்கருப் பறிய லூரினைச்
சிரபுரச் சிறுவர்கை தொழுது செந்தமிழ்
உரையிசை பாடியம் மருங்கி னுள்ளவாம்
சுரர்தொழும் பதிகளுந் தொழுது பாடினர்.

—சேக்கிழார், திருஞானசம்பந்தர்புராணம், : 255

அடைந்தவர்களது கரு (பிறப்பு) பறிக்கப்படுதலால் காரணப் பெயராய் வந்த கருப்பறியலூரின் தன்மை பற்றி உரைக்கும் வாயிலாக இறைவரது புகழ் பாடுதலால் **உரை இசை** என்று சேக்கிழார் பெருமான் போற்றியருளினர் எனக் கொள்க.

பண்: இந்தளம்] திருவிராகம் [2-ம் திருமுறை

திருச்சிற்றம்பலம்

சுற்றமொடு பற்றவை துயக்கற அறுத்துக்
குற்றமில் குணங்களொடு கூடுமடி யார்கள்
மற்றவரை வானவர்தம் வானுலக மேற்றக்
கற்றவ னிருப்பது கருப்பறிய லூரே.

பதிகப் பொழிப்புரை:

1. சுற்றத்தார்களோடு எல்லாப் பற்றுகளையும் (அவைகளால்) சோர்வுறுதபடி முற்றிலும் நீக்கிக் குற்றங்களினின்றும் நீங்கிய குணங்களோடு வந்து அடைகின்ற அடியார்களாகிய அவர்களை வீட்டுலகம் என்னும் மோட்சத்துக்கு ஏற்றுவிக்கக் கற்றவனாகிய சிவபெருமான் எழுந்தருளியிருப்பது திருக்கருப்பறியலூர் ஆகும்.

சுற்றமும் பற்றும் இறைவனை அடையும் நெறியில் இடர்களை விளைவிக்கும். எனவே அவைகளை முற்றிலும் அறுத்தவர்களே வீடு பேறடையத் தகுதியுள்ளவர்கள். அதாவது கரு பறிக்கப்படுதற்குத் தகுதியுள்ள அடியார்களாவர். இறைவர் புகழுடன் சேர்த்துக் கருப்பறியலூர் என்ற தலப்பெயர்க் காரணத்தினை விளக்கியவாறு காண்க.

சுற்ற மென்னும் தொல்பசுக் குழாங்கள்
பற்றி அழைத்துப் பதறினர் பெருகவும்

எனச் சிவநெறியடையத் தடை யாயினவற்றினின்றும் தப்பிப் பிழைத்ததைச் சொல்லுமிடத்தில் மாணிக்கவாசகர் அருளியது காண்க திருவாசகம்: போற்றித் திருவகவல்—வரிகள் 48-49)

சுற்றம்— மனைவி, மக்கள் முதலிய உறவினர், மற்றும் தன்னினத்தவர்.

துயக்கு — சோர்வு, தளர்வு. இதற்கு இவ்வாறின்றி **அறிவு வேறு படல்** எனப் பொருள்கூறி 'சிவபிரானையே அறியும் அறிவு வேறுபடாதவாறு சுற்றம் முதலியவற்றை அறுத்து என்றபடி'' எனப் பொருள் கொண்டனர் திருத் தருமபுரக் குறிப்புரையாசிரியர்.

பற்று—தானல்லாத உடம்பை யானென்றும், தன்னோடு இயைபில்லாத பொருளை எனதென்றும் கருதுகிற இரு வகைப்பற்று. மற்று உள்ளஎல்லாப் பற்றுக்களும் இவ்விரு வகைப்பற்றினையே சூழ்ந்ததாம் எனக் கொள்க. ''இவ்விரு வகைப்பற்றினையும் விட்டார்க்கே வீடு உளது என்பது கூறப் பட்டது'' என்று பரிமேலழகர்,

''யானென தென்னுஞ் செருக்கறுப்பான் வானோர்க்(கு)
உயர்ந்த உலகம் புகும்''. (திருக்குறள்—346)

என்ற குறளுக்குக் கூறிய உரைப் பகுதியினையும் இங்கு நோக்குக. 'அற்றது பற்றெனில் உற்றது வீடு' என்றதும் காண்க.

குற்றம்—காமம், குரோதம், லோபம், மோகம், மதம், மாச்சரியம் என்று அறநூலார் கூறுகின்ற ஆறுகுற்றங்கள், காமம், வெகுளி, மயக்கம் எனக் கூறலுமாம். இவைகளே பற்று உண்டாகக் காரணமாதலும் காண்க.

குணங்கள்—ஞானம், அருள், தவம், பொறை; வாய்மை' மேன்மை, மோனம், ஐம்பொறியடக்கல் போன்ற சத்துவ குணங்கள். இவைகள் பற்று நீங்குதற்குச் சாதனமாதலும் காண்க.

மற்று—இங்குப் பொருளில்லாத அசையாக வந்தது.

அவரை—அடியார்களாகிய அவர்களை

வானவர்தம் வானுலகம்—வானவர்க்கும் எய்துதற்கரிய வீட்டுலகம். **வான் உலகம்**—உயர்ந்த உலகம். (வீடு பேறு.) **வானோர்க்குயர்ந்த உலகம்** என்ற முன் கூறிய திருக்குறள் பகுதியும் காண்க.

கற்றவன்—இயல்பாகவே உணர்ந்த பெருமான் எனக் கொள்க. இறைவர் முற்றறிவு (சர்வக்ஞத்துவம்) உடையவர்.

வண்டணைசெய் கொன்றையது வார்சடைகள் மேலே
கொண்டணைசெய் கோலமது கோளரவி னோடும்
விண்டணைசெய் மும்மதிலும் வீழ்தரவொ ரம்பால்
கண்டவ னிருப்பது கருப்பறிய லூரே. **2**

2. வண்டுகள் வந்து அணைகின்ற கொன்றையாகிய மலர் மாலையை நீண்ட சடைகளின் மேல் கொண்டு செய்கின்ற திருக்கோலத்துடன், வலிமை மிக்க பாம்பினையும் அணிந்தவனாகி, தம்முடைய இடங்களை விட்டுப் பெயர்ந்து அணைகின்ற (விண்ணில் திரிந்து உலகுக்குத் துன்பம் செய்து வந்த) மூன்று மதில்களும் எரிந்து வீழும்படி ஒரு அம்பினால் கண்டவனாகிய சிவபெருமான் எழுந்தருளியிருப்பது திருக்கருப்பறியலூராகும்.

கண்டவன்—எரியும்படியாகச் செய்தவன், அல்லது ஓரம்பெய்து அவை எரிவதைப் பார்த்தவன் எனினுமாம்.

நெற்றிக் கண்ணுல் பார்த்தவன் (அம்பெய்ததோடு நில்லாது) எனவுங் கொள்ளலாம்.

சடை மேல் கொன்றை அணிந்த கோலமுடையவன், அரவு அணிந்தவன், மும்மதில் வீழ்தரக் கண்டவன். இத்தகைய புகழ் வாய்ந்த நம் பெருமான் இருப்பது கருப்பறியலூர் என்பதாம்.

வேதமொடு வேதியர்கள் வேள்விமுத லாகப்
போதினொடு போதுமலர் கொண்டுபுனை கின்ற
நாதனென நல்லிருள்முன் ஆடுகுழை தாழும்
காதவ னிருப்பது கருப்பறிய லூரே. 3

3. வேதமோதிய அந்தணர்கள் வேதங்களில் உள்ளபடி இறைவன் புகழைப் பாடியும், வேள்வி செய்தல் முதலிய நற்செயல்களாலும், மற்றும் உரிய காலங்கள் தோறும் மலரும் பருவத்துப் பூக்களைக் கொண்டும் தமது தலைவன் எனப் போற்றிப் பூசிக்கின்ற, நள்ளிருளில் ஆடுகின்ற குழை தாழும் காதினையுடையவனுன சிவபெருமான் எழுந்தருளியிருப்பது திருக்கருப்பறியலூர் ஆகும்.

திருஞானசம்பந்தர் திருக்கருப்பறியலூருக்கு எழுந்தருளிய அக்காலத்தில் அங்கு வேதியர்கள் மிகுந்திருக்க வேண்டும் என்பது இத்திருப்பாடலால் தெரிகிறது. வேதங்களில் **'தனி முதலாம் பரன்'** என்று கூறிய வண்ணம் அவன் புகழ் துதித்தலும், பெருமானுக்குகந்த சிவ வேள்விகள் செய்தலும், காலாகாலங்களில் போதுமலர் கொண்டு அருச்சித்தலும் அவர்கள் செய்த வழிபாடு எனத் தெரிகிறது. அங்ஙனம் வேதியர்கள் தமது நாதனென வழிபட்ட நள் இருள் ஆடும் குழைக்காதன் இருப்பது திருக்கருப்பறியலூர் என்பது இப்பாடலின் திரண்ட கருத்தாகக் கொள்க.

இக்காலத்தில் திருநீறு தரிக்கும் வேதியர்கள் கூட வைஷ்ணவ மோகத்தில் சிக்குண்டிருப்பதும், சுமார்த்த

பிராமணர்களில் ஒரு பகுதியினர் திருநீறு தரிக்காது 'நாமம் போல மேல் நோக்கிய குறியிடுவதும், கோபி சந்தனம் தரிப்பதும் கலியின் கொடுமை போலும்!

மடம்படு மலைக்கிறைவன் மங்கையொரு பங்கன்
உடம்பினை விடக் கருதி நின்றமறை யோனைத்
தொடர்ந்தணவு காலனுயிர் காலவொரு காலால்
கடந்தவ னிருப்பது கருப்பறிய லூரே. **4**

4. தவஞ்செய்யும் முனிவரிருக்கைகள் நிறைந்த இமய மலை அரசனின் மகளான பார்வதி தேவியை ஒரு பங்கிலே கொண்டவனும், இறந்துவிட வேண்டுமே என்று (கவலையுடன்) கருதி நின்றவனாகிய மறையவனாகிய மார்க்கண்டேயனைத் தொடர்ந்து வந்து (பாசத்தால் பிணிக்க) அணுகிய காலனது உயிர் போகும்படி ஒரு காலால் உதைத்தவனாகிய சிவபெருமான் எழுந்தருளியிருப்பது திருக்கருப்பறியலூராகும்.

மடம் — ஆசிரமம், முனிவரிருக்கை. மலைச்சாரலில் ஆசிரமம் அமைத்துக்கொண்டு முனிவர்கள் தவஞ்செய்து கொண்டிருந்தனர் என்பது கருத்து.

நின்ற —சிவபெருமான் திருமுன்பு நின்று கொண்டிருந்த

மறையோன் — இங்கு மார்க்கண்டேயர்.

உடம்பினை விடுதல் — இறத்தல்.

விட — விடச்செய்ய எனப் பொருள் கொண்டு நின்ற மறையோன் உடம்பினை விடக் கருதித் தொடர்ந்தணவு காலன் எனக் கூட்டிப் பொருள் கொள்ளலுமாம். இதற்கு மறையோனை இறத்தல்செய்யக் கருதித் தொடர்ந்த இயமன் என்பது பொருள்.

உயிர் கால — உயிர் கக்க, உயிர் போக என்றதாம்.

கடந்தவன் — கடக்க உதைத்தவன்.

ஒருத்தியுமை யோடுமொரு பாகமது வாய
நிருத்தனவன் நீதியவன் நித்தன்நெறி யாய
விருத்தனவன் வேதமென அங்கமவை ஓதும்
கருத்தவ னிருப்பது கருப்பறிய லூரே. 5

5. ஒப்பற்றவளான உமா தேவியாரோடு ஒரு பாக மான நிருத்தன், நீதி வடிவினன், என்றும் அழியாதவன், நெறியாய விருத்தன் என இவ்வாறு வேதங்களும் வேதாங் கங்களுமான அவைகள் ஓதுகின்ற தலைவனுகிய சிவபிரான் இருப்பது திருக்கருப்பறியலூராகும்.

நிருத்தன்—கூத்தியற்றுபவன். விருத்தன்—முதியவன். ''முன்னைப் பழம் பொருட்கும் முன்னைப் பழம் பொருள்''.

கருத்தவன் — கர்த்தா (தலைவன்); அல்லது வேதங் களின் கருத்தாக இருப்பவன் எனக் கொள்ளலுமாம்.

விண்ணவர்கள் வெற்பரசு பெற்றமகள் மெய்த்தேன்
பண்ணமரும் மென்மொழியி ளுளையணை விப்பான்
எண்ணிவரு காமனுடல் வேவஎரி காலும்
கண்ணவ னிருப்பது கருப்பறிய லூரே. 6

6. விண்ணவர்களுக்கும் மலைக்கும் அரசாகிற இம வான் பெற்ற மகளும், தேன் போன்றதும் பண் அமைந்தது மான இனிய மென்மையான மொழியினையுடைய உமா தேவியாரை ஒருபாகத்தில் அணைவிப்பவனும், (மௌன நிலையைக் கலைக்க) எண்ணி வருகின்ற மன்மதனது உடல் வெந்து சாம்பலாகும்படி நெருப்பைக் கக்குகின்ற கண்ணை உடையவனுமான சிவபிரான் எழுந்தருளியிருப்பது திருக் கருப்பறியலூர் ஆகும்.

மலையரசனுன இமவானை விண்ணவர்க்கு அரசு என்பது உபசாரம். அவ்வளவு சிறப்புடையவன் என்பதாம்,

தேன்மொழியினுள், பண்ணமரு மென் மொழியினுள் எனக்கூட்டிப் பொருள் கொள்க.

ஆதியடி யைப்பணிய அப்பொடு மலர்ச்சேர்
சோதியொளி நற்புகை வளர்க்குவடு புக்குத்
தீதுசெய வந்தணையும் அந்தகன் அரங்கக்
காதினன் இருப்பது கருப்பறிய லூரே. 7

7. ஆதிப்பிரானுகிய சிவபிரானை அடி பணிவதற்கு நீர், மலர், தீபம், இவற்றோடு தூபமும் வளர்க்கும் பிரமசாரியாகிய மார்க்கண்டேயரிடம் புகுந்து, அவருக்குத் தீது செய்ய வந்தணைந்தவனுகிய இயமன் அழியும்படி உதைத்தவனுகிய சிவபிரான் எழுந்தருளியிருப்பது திருக்கருப்பறியலூர் ஆகும்.

மலரோடு என்பதில் உள்ள ஒடு என்பதை சோதி ஒளி என்பதோடு சேர்த்து சோதி ஒளியோடு நற்புகை வளர்க்கும் எனக்கூட்டிப் பொருள் கொள்ளப்பட்டது.

அப்பு—நீர், சோதி ஒளி—தீபம்.

நற்புகை—சாம்பிராணி, குங்கிலியம் போன்றவற்றால் இடும் தூபம்.

வளர்க்குவடு—வளர்க்கும் வடு. 'ம'கர ஒற்று சந்தம் நோக்கிக் குறைந்தது. வடு - பிரமசாரியாகிய மார்க்கண்டேயர்.

அரங்கல்—அழிதல். காதினன்-காதுதலைச் செய்தவன் காதுதல்-கொல்லுதல். இங்கு உதைத்தல் என்னும் பொருட்டு வந்தது

வாய்ந்தபுகழ் விண்ணவரும் மண்ணவரும் அஞ்சப்
பாய்ந்தமர்செ யுந்தொழிலி லங்கைநகர் வேந்தற்(கு)
ஏய்ந்தபுய மத்தனையு மிற்றுவிழ மேனாள்
காய்ந்தவ னிருப்பது கருப்பறிய லூரே. 8

8. புகழ் வாய்ந்த விண்ணவர்களும், மண்ணுலகத் தவரும் அஞ்சும்படி பாய்ந்து போர் செய்யும் தொழிலை உடைய இலங்கை நகர் மன்னவனாகிய இராவணனுக்குப் பொருந்திய தோள்கள் அத்தனையும் முறிந்து விழும்படி முற்காலத்தில் சினந்தவனாகிய சிவபெருமான் எழுந்தருளி இருப்பது திருக்கருப்பறியலூராகும்.

ஏய்ந்த—பொருந்திய; காய்ந்தவன்—கோபித்தவன்.

பரந்தது நிரந்துவரு பாய்திரைய கங்கை
கரந்தொர்சடை மேன்மிசை யுகந்தவளை வைத்து
நிரந்தரம் நிரந்திருவர் நேடியறி யாமல்
கரந்தவ னிருப்பது கருப்பறிய லூரே. 9

9. வரிசையாகப் பரந்து வருகின்ற பாயும் அலைகளை உடைய கங்கையினை மறைத்து ஒரு சடையினது மேலிடத்தில் அவளை வைத்து உகந்தவனும், எப்போதும் இருவர் தேடியறியாமல் ஒளிந்தவனுமான சிவபிரான் எழுந்தருளி இருப்பது திருக்கருப்பறியலூராகும்.

அலைகள் வரிசையாக வருகின்றன. பரவி வருகின்றன. வேகமாகப் பாய்கிறது கங்கை. அதனைச் சடையில் மறையுமாறு செய்து அங்கேயே இருக்கச் செய்த பேராற்றல் உடையவன். பிரமவிட்டுணுக்களுக்குத் தேட அரியவன் சிவபிரான் என்பதாம்.

நிரந்தரம் சடை மேன்மிசை வைத்து எனக் கொண்டு கூட்டியும் பொருள் கொள்ளலாம்.

நிரந்து இருவர் தேடி—முறைமையாக இருவர் தேடி. (ஒருவர் (திருமால்) வராகமாகி கீழே இடந்து சென்றும், மற்றவர் (பிரமதேவன்) அன்னமாகி மேலே பறந்து சென்றும் தேடி).

அற்றமறை யாவமணர் ஆதமிலி புத்தர்
சொற்றமறி யாதவர்கள் சொன்னசொலை விட்டுக்

குற்றமறி யாதபெரு மான்கொகுடிக் கோயில்
கற்றென இருப்பது கருப்பறிய லூரே. 10

10. உடலில் மறைக்க வேண்டிய பகுதியை மறைக்காத அமணர்களும், அறிவில்லாத பௌத்தர்களும் தாங்கள் சொல்லும் சொற்களை அறியாதவர்கள். (அதாவது அவற்றில் பொருளில்லாமையை அறியாதவர்கள்) (எனவே) அவர்களது சொற்களை ஏற்காது விட்டுக் குற்றமறியாத பெருமானது கொகுடிக்கோயில் கல்லைப் போன்று உறுதியாக இருப்பது திருக்கருப்பறியலூர். (அங்குச் சென்று வழிபடுங்கள் என்றதாம்).

அற்றம் மறையா அமணர் — திகம்பர சமணர்கள். (ஆடை தவிர்த்தவர்கள்).

ஆதமிலி — அறிவுடைமை இல்லாத, ஆதம் — அறிவுடைமை.

கொகுடி — ஒரு வகை முல்லை. இது தல மரமாதலின் கோயில் கொகுடிக் கோயில் என வழங்கப்படுகிறது.

குற்றமறியாத பெருமான் — தலத்து இறைவர் பெயர்.

நலந்தரு புனற்புகலி ஞானசம் பந்தன்
கலந்தவர் கருப்பறியல் மேயகட வுள்ளைப்
பலந்தரு தமிழ்க்கிளவி பத்துமிவை கற்று
வலந்தரு மவர்க்குவினை வாடலெளி தாமே. 11

திருச்சிற்றம்பலம்

11. நன்மையைத் தருகின்ற நீர் வளம் மிக்க திருப்புகலி ஞானசம்பந்தன், வந்தடைந்தவர்களது கருப்பறிதலையுடைய ஊரில் எழுந்தருளிய கடவுளாகிய சிவபிரானைப் பாடிய பயனை அளிப்பதாகிய தமிழ்ப் பாடல்களாகிய இவை பத்தையும் கற்று வழிபாடு செய்பவர்களது வினைகள் வாடுதல் மிகவும் எளிதாகும்.

கலந்தவர் கருப்பறியல்—முன்னர்க்கூறிய வண்ணம் இத் தொடர் இத்தலத்துப் பெயர்க் காரணத்தைக் குறித்தது.

பலந்தரு— இங்குப் பலன் வினைவாடுதலாம் எனக் கொள்க. வினைவாடுதலால் கருப்பறிக்கப்படுமாதலால் தலப் பெயர்க்கு உரிய பலனைக் கூறியருளியமை கண்டு கொள்க.

சுவாமி குற்றம்பொறுத்த நாதர்] [தேவி: கோல்வளைநாயகி
அபராதக்ஷமாபணேச்வரர் விசித்ரவளாம்பிகா
சிவம்

உ

திருநெறிய தமிழ்

திருஞானசம்பந்தர் தாம் முதலாவதாக அருளிய 'தோடுடைய செவியன்' திருப்பதிகத்தின் கடைசிப்பாடலில் தமது பதிகத்தை **திருநெறிய தமிழ்** என்கின்றார். தமிழ் மொழியில் அருளியதால் **'தமிழ்'** என்றே கூறினார். இதற்குக் காரணம் யாதாயிருக்கலாம்.?

இறைவனே வேதங்களை அருளிச் செய்தான் என்ற கருத்தும் வடமொழியிலன்றி வேதங்கள் தோன்றா என்ற கருத்தும் வலுத்திருந்தது. மேலும் வடமொழி மறைகள் தம்மை ஓதுவோர்க்கு இம்மை மறுமைப் பயன்களைத் தர வல்லன என்ற எண்ணமும் உறுதி கொண்டிருந்தது. அன்றியும் இச்சிறப்புகள் தமிழுக்கில்லை, இருக்கவும் முடியாது—கூடாது என்ற எண்ணமும் எங்கும் நிறைவாய் இருந்தது. இம்முறையற்ற கருத்துக்களையெல்லாம் தூக்கி எறிந்து, வடமொழி மறைகட்குக் கூறப்படும் அத்துணைச் சிறப்புகளும் தமிழ் மொழிக்கும் உண்டு என்பதை நிலை நிறுத்தவே, ஞானசம்பந்தப் பிள்ளையார் தமிழைத் **''திரு நெறிய தமிழ்''** என்றார் எனக் கொள்க. (திரு—தெய்வத் தன்மையுள்ள; நெறிய — சிவநெறிக்குரிய; தமிழ்—தமிழ் வேதம்.)— ஆதாரம்: திரு. மறை திருநாவுக்கரசு அவர்களின் பெரியபுராண ஆய்வுரை—தொகுதி— 3, சம்பந்தர், பக்கங்கள் 36—37).

சிவமயம்

சிவனுண்டு பயமில்லை

பஞ்சாக்கரத் திருப்பதிகம்

[அஞ்செழுத்தின் திருப்பதிகம்]

சீகாழியில் அருளியது

பதிக வரலாறு:

திருக்கருப்பறியலூரில் கொகுடிக் கோயிலில் குற்றம் பொறுத்தநாதனைப் பலந்தரு தமிழ்க்கிளவிப் பாடிப் பரவிய பின்னர், திருஞானசம்பந்தர் அங்கு நின்றும் புறப்பட்டுச் சீகாழிப்பதியை நோக்கி எழுந்தருளினார். இச்செய்தியினைக் கேட்ட சீகாழி மறையவர்கள் பெருமகிழ்ச்சியுடன் எதிர் கொண்டு சென்று அழகிய முத்துச்சிவிகையில் பிள்ளையாரைக் கண்டு தரிசித்தனர். கைகளைச் சிரமேற் கூப்பிக் கொண்டு வணங்கிப் பெருமகிழ்ச்சியால் ஆரவாரித்தனர். பிள்ளையார் சிவிகையினின்றும் இறங்கி நகரத்தினுள் புகுந்தருளினார். மங்கல வாழ்த்துக்கள் இருபுறமும் நிறையத் திருக்கோபுரத்தை வணங்கிக் கோயிலுள்ளே புகுந்து வலம் வந்து, தோணியப்பர் திருமுன்பு சென்று, வணங்கி நின்று திருப்பதிகம் பாடித் துதித்தார். (இப்பதிகம் இன்னதென்று துணியக் கூடவில்லை.) பின்னர் புறம்போந்து திருநீலகண்ட யாழ்ப்பாணரை அவரது மனைக்குச்செல்ல விடை கொடுத்தருளி, வேதியர்கள் துதிக்கத் தமது தந்தையார் அருகணையத் தாயார் பகவதியார் திருநீற்றுக் காப்பிட்டுப் பணிந்து பாராட்ட, அனைவர்க்கும் அருள் புரிந்து தமது திருமாளிகையினுள்ளே இனிது எழுந்தருளியிருந்தார்.

அவ்வாறு இருக்கும் போது பிள்ளையாருக்கு உபநயனப் பருவம் (இது ஏழு வயது எனக்கருதப்படும்) எய்த, மறையவர்கள் தொன்மையான வேத நூலில் கூறியபடி உபநயனச் சடங்குகளைச் செய்தார்கள். பிள்ளையார் மான் தோலுடன் கூடிய பூணூலைத் தாங்கினார்.

ஒருபிறப்பும் எய்தாமை உடையார் தம்மை
உலகியல்பில் உபநயன முறைமை யாகும்
இருபிறப்பின் நிலைமையினைச் சடங்கு காட்டி
எய்துவிக்கும் மறைமுனிவர் எதிரே நின்று
''வருதிறத்தின் மறைநான்குந் தந்தோம்'' என்று
மந்திரங்கள் மொழிந்தவர்க்கு, மதுர வாக்கால்
பொருவிறப்ப ஓதினர் புகலி வந்த
புண்ணியனார் எண்ணிறந்த புனித வேதம்.

—பெரியபுராணம் : திருஞானசம்பந்தர்புராணம்—**264**

என்று சேக்கிழார் பெருமான் கூறியருளியபடி, யாதொரு பிறப்பிலும் வாராத நிலைமையுடைய பிள்ளையாரை உலக இயல்பில் வைத்து இருபிறப்பாளராகச் சடங்குகள் மூலம் செய்து வழிவழியாக வந்து கொண்டிருக்கும் வேதங்கள் நான்கினையும் உமக்குத் தந்தோம் என அச்சடங்குகளைச் செய்த மறைமுனிவர்கள் கூறினர்கள். அவ்வாறு கூறிய அவர்க்குப் புகலி வந்த புண்ணிய மூர்த்தியாகிய பிள்ளையார் தமது மதுரமான திருவாக்கினால் ஒப்பற்ற நிலையில் எண்ணிறந்த புனித வேதங்களையும் எடுத்தோதினர்.

அதனைக் கண்டு மறையவர்கள் பேரதிசயம் அடைந்தனர். ஆயிரக்கணக்கான வேதங்களையும் அவற்றிற்கு அங்கமான பல்வேறு தொன்மையான கலைகளையும் எடுத்து இயம்பும் பிள்ளையாரை ஆயிரங்கோடி இளஞ்சூரியர்கள் ஒருங்கே உதித்தது போலத் தோணியப்பரின் பேரருளைப் பெற்ற பெருமையினை எண்ணி, அவரையே தம் கண்முன் வரும் தியானப் பொருளாகக் கொண்டு வணங்கித் தாங்கள் முன்னே பயின்ற மறைகளில் தமக்குள்ள ஐயங்களைக் கேட்டுத் தெளிந்து பெருவாழ்வடைந்தனர்.

திருஞானசம்பந்தப் பிள்ளையார் மந்திரங்கள் எல்லாவற்றையும் அம்மறையவர்கட்கு அருளிச் செய்து அதன்பின் வைதிக நூற்சடங்குகளில் அவர்களுக்கு ஏற்பட்ட ஐயப்

பாடுகள் அனைத்தினையும் தெளியும்படி அருள்புரிந்து, அவர்களது மனம் தெளிவினையடையும்படி முந்தையாகிய முதன்மை பெற்ற எல்லா மந்திரங்களும் தோன்றுவதற்குக் காரணம் சிவபிரானது திருவைந்தெழுத்து என்னும் ஸ்ரீபஞ்சாக்ஷரமேயாகும் என்று உபதேசிப்பாராய் '**அந்தியுள் மந்திரம் அஞ்செழுத்துமே**' எனவரும் ஸ்ரீபஞ்சாக்ஷரத் திருப் பதிகத்தினை அருளிச் செய்தார். இப்பதிகம் "**துஞ்சலும் துஞ்சலிலாத போழ்தினும்**" எனத்தொடங்கும் கீழே கொடுத்துள்ள பதிகமாகும். "முப்போதும் தீயோம்பும் செந்நெறியுடைய வேதியர்க்கு அந்தியுள் மந்திரம் அஞ் செழுத்துமே" என்பதை இப்பதிகத்தின் மூலம் அறிவுறுத்தி யருளினார். அந்தணர்கள் அதனைச் செவிமடுத்துப் பெரு மகிழ்ச்சியில் திளைத்து, அவருடைய திருவருளைப் பெற்று உய்ந்தார்கள். நாமும் பிள்ளையாரது இப்பதிகத்தைப் பன் முறையும் ஓதிப் பிள்ளையாருடைய திருவருளையும் அதன் மூலம் சிவபெருமான் திருவருளையும் பெற்று உய்வோமாக.

பதிகங்களின் தொடர்ச்சிக்காகப் பதிகத்தை மட்டும் இங்குக்கொடுத்துள்ளோம். பொழிப்புரை 1-ம் தமிழ் மாலை பக்கங்கள் 44 – 45-ல் காண்க.

பண்: காந்தாரபஞ்சமம்] **[3-ம் திருமுறை**

திருச்சிற்றம்பலம்

துஞ்சலுந் துஞ்சலி லாத போழ்தினும்
நெஞ்சக நைந்து நினைமின் நாடொறும்
வஞ்சக மற்றடி வாழ்த்த வந்தகூற்று
அஞ்சவு தைத்தன அஞ்செ ழுத்துமே. 1

மந்திர நான்மறை யாகி வானவர்
சிந்தையுள் நின்றவர் தம்மை யாள்வன
செந்தழ லோம்பிய செம்மை வேதியர்க்கு
அந்தியுள் மந்திரம் அஞ்செ ழுத்துமே. 2

ஊனிலு யிர்ப்பை யொடுக்கி யொண்சுடர்
ஞானவி ளக்கினை யேற்றி நன்புலத்து
ஏனைவ ழிதிறந் தேத்து வார்க்கிடர்
ஆனகெ டுப்பன அஞ்செ ழுத்துமே. 3

நல்லவர் தீயரெ னாது நச்சினர்
செல்லல்கெ டச்சிவ முத்தி காட்டுவ
கொல்லந மன்தமர் கொண்டு போமிடத்து
அல்லல்கெ டுப்பன அஞ்செ ழுத்துமே. 4

கொங்கலர் வன்மதன் வாளி யைந்தகத்
தங்குள பூதமு மஞ்ச ஐம்பொழில்
தங்கர வின்பட மஞ்சுந் தம்முடை
அங்கையில் ஐவிரல் அஞ்செ ழுத்துமே. 5

தும்ம லிருமல் தொடர்ந்த போழ்தினும்
வெம்மை நரகம் விளைந்த போழ்தினும்
இம்மை வினையடர்த் தெய்தும் போழ்தினும்
அம்மையி னுந்துணை அஞ்செ ழுத்துமே. 6

வீடுபி றப்பை அறுத்து மெச்சினர்
பீடைகெ டுப்பன பின்னை நாடொறும்
மாடுகொ டுப்பன மன்னு மாநடம்
ஆடியு கப்பன அஞ்செ ழுத்துமே. 7

வண்டம ரோதி மடந்தை பேணின
பண்டையி ராவணன் பாடி உய்ந்தன
தொண்டர்கள் கொண்டு துதித்த பின்னவர்க்(கு)
அண்டம ளிப்பன அஞ்செ ழுத்துமே. 8

கார்வணன் நான்முகன் காணு தற்கொணாச்
சீர்வணச் சேவடி செவ்வி நாடொறும்
பேர்வணம் பேசிப் பிதற்றும் பித்தர்கட்(கு)
ஆர்வண மாவன அஞ்செ ழுத்துமே. 9

புத்தர்ச மண்கழுக் கையர் பொய்கொளாச்
சித்தத் தவர்கள் தெளிந்து தேறின
வித்தக நீறணி வார்வி னைப்பகைக்(கு)
அத்திர மாவன அஞ்செ ழுத்துமே. 11

நற்றமிழ் ஞானசம் பந்த னுன்மறை
கற்றவன் காழியர் மன்ன னுன்னிய
அற்றமில் மாலையீ ரைந்தும் அஞ்செழுத்(து)
உற்றன வல்லவர் உம்ப ராவரே.

திருச்சிற்றம்பலம்

உ

ஒரு பிறப்பும் எய்தாமை உடையார்

சேக்கிழார் பெருமான் ஞானசம்பந்தரை உலகியல்பின் நிறுத்தி உபநயனம் செய்வித்து இருபிறப்பாளர் ஆக்கினார்கள் எனக்கூறுமிடத்து அவரை **ஒரு பிறப்பும் எய்தாமை உடையார்** எனக் கூறியருளினார். அதன் விளக்கத்தைச் சிறிது காண்போம். உயிர்களுள் அணுபட்சம் என்றும் சம்பு பட்சம் என்றும் இருவகை உண்டு. அணுபட்ச உயிர்கள் பிறப்பிறப்புக்களுக்கு உரியனவாகும். ஆனால் 'சம்பு பட்சம்' என்பது சிவபிரானைச் சார்ந்த தெய்வத்தன்மையுடைய பேருயிர்கள் ஆகும். இவ்வுயிர்கள் சிவத்தின் தன்மைகளைப் பெற்றிருக்கும். இவற்றிற்குப் பிறப்பிறப்புக்கள் இல்லை. பேரின்ப நிலையிலுள்ளவை. இவற்றில் தலையாய பேருயிரே திருஞானசம்பந்தர்.

உலகத்தோரை நன்னெறியில் நிறுத்தி உய்விக்கும் பெருந்தவ ஆற்றல் சம்பந்தர்க்கே உளவாகலின் சிவபிரான் அவரை உலகிற்கு விடுத்தருளினான். ஆகவே பிள்ளையாருக்கு முற்பிறவிகள் இல்லை என்பதையே ஒரு பிறப்பும் எய்தாமை உடையார் எனச்சேக்கிழார் கூறியருளினார் என்று கொள்க.

—ஆதாரம் : திரு. மறை. திருநாவுக்கரசு அவர்களின் பெரியபுராண ஆய்வுரை - 3-ம் தொகுதி-சம்பந்தர் பக்கங்கள் 28-29

சிவமயம்

சிவனுண்டு பயமில்லை

சீகாழித் திருப்பதிகங்கள்

பதிக வரலாறு: திருஞானசம்பந்தப் பிள்ளையார் ஒவ்வொரு தலயாத்திரை முடிந்து வந்ததும் சீகாழித் திருக்கோயிலுக்குச் சென்று பதிகம் பாடி வணங்கினர் என்றும், அடுத்த தலயாத்திரை புறப்படும் வரையில் சீகாழியில் எழுந்தருளியிருந்த காலத்தில் திருத்தோணியப்பரை உரிய காலங்களில் தரிசித்துப் பதிகங்கள் பாடினர் என்றும் அறியக் கிடக்கிறது. குறிப்பாக நான்காவது தலயாத்திரையினை முடித்துக் கொண்டு, சீகாழிக்குத் திரும்பியபோது **"திருத்தோணி மிசை மேவினுர்கள் தங்கள் திருமுன்பு தாழ்ந்து எழுந்து நின்று தமிழ் வேதம் பாடினர் தாளம் பெற்ருர்"** எனப் பெரியபுராணம் கூறுகிறது.

மேலும் பெரியபுராணப்படி சீகாழியில் அருளிச் செய்யப்பட்ட பதிகங்கள் பற்றி அறியக்கூடிய செய்திகளாவன:

1. உபநயன காலத்தில் அந்தணர்களுக்குத் திருபஞ்சாக்கரப் பதிகம் பாடி உபதேசித்தருளிய பின்னர், தாம் தெய்வத் திருத்தோணி அமர்ந்தாரைச் சென்று தாழ்ந்து மெய்த்த இசைப் பதிகங்கள் கொண்டு போற்றி அடியவர்களுடன் இனிது அமரும் பண்பு கூடப் பரமர்தாள் பணிந்திருந்தார்.

2. திருநாவுக்கரசு சுவாமிகள் தில்லையில் கூத்தப் பெருமானைக் கும்பிட்டிருந்தபோது சீகாழியில் திருஞான சம்பந்தர் ஞானப்பால் உண்ட செய்தியினை அடியவர்கள் சொல்லக் கேட்டு அறிந்து அவரைத் தரிசிக்க சீகாழி வந்து சேர்ந்தார். ஆளுடைய அரசுகளும் ஆளுடைய பிள்ளையாரும் முதல் தடவையாக சந்தித்தது இதுவேயாகும்.

அங்ஙனம் சந்தித்து அரசுகளைத் திருக்கோயிலுக்கு அழைத்துச் சென்று, கும்பிடச் செய்த பின்னர் தமது மாளிகைக்கு அழைத்து வந்து அன்பால் அமுது செய்வித்துப் பெருகிய அன்பும் நண்பும் பொங்கிய காதலில் கும்பிட்டு உணருஞ் சொல் மாலைகள் சாத்தி மகிழ்வெய்தி உடனுறைந் தார்.

3. அங்ஙனம் சில நாட்கள் செல்லத் திருநாவுக்கரசர் பரமனூர் பதிகள் பலவற்றையும் கண்டு கும்பிட வேண்டிப் புகலிப்பிரான் இசைவோடும் பிரியாத நண்போடும் போந்த பின்னர், திருஞானசம்பந்தர் தேக்கிய மாமறைவெள்ளத் திருத்தோணி வீற்றிருந்தாரைத் தூக்கின்தமிழ்மாலை பாடித் தொழுது அங்கு எழுந்தருளியிருந்தார். அந்நாளில் பிள்ளையார் பாடி அருளியவை பற்றிப் பெரிய புராணம் கூறுவதாவது.

செந்தமிழ் மாலை விகற்பச் செய்யுட்க ளான்மொழி மாற்று
வந்தசொல் சீர்மாலை மாற்று வழிமொழி யெல்லா மடக்குச்
சந்தவி யமகமேக பாதம் தமிழிருக் குக்குறள் சாத்தி
எந்தைக் கெழுகூற் றிருக்கை யீரடி யீரடி வைப்பு.

நாலடி மேல்வைப்பு மேன்மை நடையின் முடுகு மிராகம்
சால்பினிற் சக்கர மாதி விகற்பங்கள் சாற்றும் பதிகம்
மூல விலக்கிய மாக வெல்லாப் பொருள்கோளு முற்ற
ஞாலத் துயர்காழி யாரைப் பாடினூர் ஞானசம் பந்தர்

—பெரியபுராணம் : திருஞானசம்பந்தர் புராணம்— 276, 277

பல விகற்பச் செய்யுட்களாகிய செந்தமிழ் மாலைகளாக அவற்றிற்கு மூல இலக்கியமாக எல்லாப் பொருள்கோளும் முற்றிக் காணும்படியாக சீகாழி இறைவரைத் திருஞான சம்பந்தர் பாடியருளினூர் என்பதாம்.

ஈண்டு கூறப்பட்ட விகற்பச் செய்யுட்களாவன :—

. திருமொழி மாற்று, திருமாலை மாற்று, வழி மொழித் திருவிராகம், திரு ஏகபாதம், திருவிருக்குக்குறள், திருவெழு

கூற்றிருக்கை, ஈரடி, ஈரடி மேல் வைப்பு, நாலடி மேல் வைப்பு, திருவிராகம், திருச்சக்கரமாற்று, பல் பெயர்ப் பத்து, கோமூத்திரி இவை முதலாயின பதிகங்களாம்

4. ஐந்தாவது தல யாத்திரையைச் சமணர் புத்தரை வாதில் வென்று பரசமய நிராகரணமும் சைவஸ்தாபனமுமாகிய அவதார காரியத்தை முடித்துக் கொண்டு வெற்றிகரமாகத் திரும்பிய போது சீகாழி வந்து சேர்ந்ததும் **'உற்றுமை சேர்வது'** என்னும் திருவியமகப் பதிகம் பாடினர். ஆறுவது தலயாத்திரையாகிய தொண்டைநாட்டு யாத்திரை தொடங்கும் வரையில் சீகாழியில் எழுந்தருளி இருந்த காலத்தில் பொங்கும் இன்னிசைத் திருப்பதிகம் பல பாடினர்.

5. ஆறுவது தலயாத்திரையினை முடித்துக் கொண்டு திரும்பி வந்த போது, சீகாழி தூரத்தே தோன்றலுமே **வண்டார் குழலரிவை** எனத் தொடங்கும் திருப்பதிகத்தையும், ஊரின் புறம்பணைந்ததும் **காழி நகர் சேர்மின்** என்ற மகுடத்துடன் முடியும் திருப்பதிகத்தையும் பாடியருளினர். பின்னர் திருக்கோயில் சென்று பொன்னிமயப் பாவையுடன் புணர்ந்திருந்தபுராதனரை வணங்கிப்பரவு திருப்பதிகங்கள் பலவும் இசையினிற் பாடிப் புறம்பெய்தித் தம் திருமாளிகை சேர்ந்தார்.

அதன் பின்னர் திருமணத்தின் பொருட்டு திருநல்லூர்ப் பெருமணம் (ஆச்சாள்புரம்) செல்லும் வரையிலும் சீகாழியில் எழுந்தருளியிருந்த காலத்தில் சுந்தர ஆரணங்குடன் தோணியில் வீற்றிருந்தாரைச் செந்தமிழின் பந்தத்தால் திருப்பதிகம் பல பாடினர்.

6. இவையேன்றித் திருவீழிமிழலையிலும் மதுரையிலும் எழுந்தருளியிருந்தபோது சீகாழியின்மேல் பதிகங்கள் பாடியுள்ளார்.

சீகாழிப்பதிகங்களாகத் தற்போது கிடைத்துள்ள திருப்பதிகங்களுள் வரலாறு கிடைப்பனவும், மூல இலக்கியங்கள் என்று சேக்கிழார் குறிப்பிட்டருளியனவும் தவிர, மற்றைய வைகளை மேற் காட்டிய காலங்களில் இவை இவை இன்னின்ன காலங்களில் பாடியருளியவை எனத் துணியுமாறில்லை.

எனவே வரலாறு கிடைக்காத சீகாழிப் பதிகங்கள் அனைத்தையும், அங்ஙனமே வரலாறு கிடைக்காத தனித் திருப்பதிகங்கள் சிலவற்றினையும் தொடர்ந்து சில தமிழ் மாலைகளில் வெளியிட்டுப் பின்னர் பிள்ளையாரின் ஐந்தாவது தலயாத்திரையினைத் தொடர்வது என்று திருவருள் துணையுடன் உறுதி கொண்டுள்ளோம். அதன்படி சீகாழிப் பதிகங்கள் ஒவ்வொன்றும் சீகாழியின் பன்னிரு பெயர்களில் எவ்வெப்பெயரில் பாடப்பட்டதோ அவ்வப்பெயரிலேயே வெளியிடப்படும். அவற்றைப் பயின்று மகிழ்ந்து ஞானப் பிள்ளையாரின் திருவருளையும் அதன் மூலம் சீகாழிப் பெருமானின் திருவருளையும் பெற்று நாம் உய்ந்திடுவோமாக!.

சிவம்

உ

வைகாசி மூல வெளியீடு

அப்பரடிகளின் திருநட்சத்திரமான சித்திரைச் சதய வெளியீடாகவே இப்பத்தாவது தமிழ் மாலை வர வேண்டும் என்று எவ்வளவோ முயன்றும், இது திருஞானசம்பந்தர் திருநட்சத்திரமான வைகாசி மூல வெளியீடாக வர வேண்டும் என்பதே இறைவனது திருவுள்ளம் போலும். எனவே அங்ஙனமே வெளி வருகிறது.

—ஆசிரியர்

சிவமயம்

சிவனுண்டு பயமில்லை

திருப்பூந்தராய் – 1

[சீகாழி]

பண்: இந்தளம்] விஞவுரை [2-ம் திருமுறை

திருச்சிற்றம்பலம்

செந்நெ லங்கழ னிப்பழ னத்தய லேசெழும்
புன்னை வெண்கிழி யிற்பவ ளம்புரை பூந்தராய்த்
துன்னி நல்லிமை யோர்முடி தோய்கழ லீர்சொலீர்
பின்னு செஞ்சடை யிற்பிறை பாம்புடன் வைத்ததே. 1

பதிகப் பொழிப்புரை :

1. செந்நெல் விளையும் அழகிய வயல்களின் அயலிடங்களில் வெள்ளைத் துணியின் மேல் பவளங்கள் விழுந்து கிடப்பதையொத்துச் செழுமையான புன்னை மலர்கள் விழுந்து கிடக்கும் பூந்தராய் என்னும் திருத்தலத்தில் தேவர்கள் நெருங்கி வந்து தமது முடிகளைத் தோய்த்து வணங்கும் திருவடியை உடைய பெருமானே! பின்னிய உமது செஞ்சடையில் பிறைச்சந்திரனைப் பாம்புடன் ஒருங்கே வைத்த காரணத்தைக் கூறியருள்வீராக.

இத்திருப்பாடலில் இறைவர் தமது சடையில் பிறைச் சந்திரனையும் பாம்பினையும் ஒரு சேர வைத்ததன் கருத்தைச் சொல்ல வேண்டுகின்றார். இம்மாதிரியே இப்பதிகத்தின் ஒவ்வொரு திருப்பாடலிலும் இறைவரின் ஒவ்வொரு செயல் பற்றியும் கூறியருள வேண்டும் என்று வினவுகையால் இத்திருப்பதிகம் விஞவுரை எனப் பெயர் பெற்றது. ஒவ்வொரு பாடலிலும் மூன்றாவது அடியில் இறைவரது பெருமை விளங்கும்படி விளித்து, நான்காவது அடியில் விஞவினை அமைத்தருளியுள்ளார்.

பூந்தராய்-சீகாழியின் பன்னிரு திருப்பெயர்களுள் ஒன்று. சங்கநிதி, பதுமநிதி என்ற இரண்டு நிதிகளின் தெய்வங்களும் பூசித்து மாறாது கொடுக்கும் வரம் பெறுவதற்காகப் பூந்தாராய் இருந்து பூசித்தமையாலும், இரணியாக்கன் என்னுமசுரனைக் கொல்லத் திருமால் பன்றியின் உருவமெடுத்துச் சென்று பூமியைத் தனது கொம்பில் ஏற்றி வருத்திய பழிதீரப் பூசித்தமையாலும் இப்பெயர் வந்ததென்று கூறப்படுகிறது. பின்னால் வழிமொழித் திருவிராகம் என்னும் பதிகத்திலும் இவ்விவரம் காணலாம்.

செந்நெலங் கழனிப்பழனம்:— சோழநாடு செந்நெல் விளைச்சல் மிகுதிக்குப் பெயர்பெற்றதாதலின் அந்நாட்டைச் சேர்ந்த சீகாழிக்கும் அப்பெருமை உண்டு. கழனி, பழனம் என்ற இரண்டு சொற்களும் வயல் என்ற பொருளையே தருவனவாகும்.

செழும்புன்னை ... ...புரை பூந்தராய் — வயல்களின் பக்கங்களில் உள்ள புன்னை மரங்களின் பூக்கள் கீழே விழுந்து கிடக்கின்றன. அக்காட்சி வெள்ளைத் துணியின் மீது பவளங்கள் நிறைந்து கிடக்கும் காட்சியை ஒத்திருந்தாகப் பாடுகிறார். இத்தகைய எழில் மிக்க பூந்தராய் என்பதாம். **கிழி—துணி.**

இராகு என்னும் பாம்பு சந்திரனை விழுங்குவதாகப் புராணங்கள் கூறுகின்றன. இதன்படி பாம்பும் சந்திரனும் தமக்குள் பகையுடையனவெனக் கொண்டு அவற்றைத் தமது சடையில் ஒரு சேர வைத்ததன் கருத்தை வினவினார் என்றும் கொள்க. சிவபெருமான் திருமுன்பு பகைப் பொருள்களும் பகை நீங்கி உறவு கொள்ளும் என்பதையும் குறிப்பிட்டருளினார் எனவும் கொள்ளலாம்.

எற்று தெண்டிரையேறிய சங்கிஞெ டிப்பிகள்
பொற்றி கழ்கம லப்பழனம்புகு பூந்தராய்ச்
சுற்றி நல்லிமை யோர்தொழு பொற்கழ லீர்சொலீர்
பெற்ற மேறுதல் பெற்றிமை யோபெரு மானிரே. 2

2. கடல் அலைகள் அடித்து வருதலால் கரையில் ஏறிய சங்குகளோடு இப்பிகளும் பொன் போல் பிரகாசிக்கின்ற தாமரை மலர்கள் நிறைந்த வயல்களில் புகுகின்ற பூந்தராய் (என்னும் இத்தலத்தை) சுற்றி நின்று நல்ல தேவர்கள் தொழுகின்ற அழகிய திருவடியையுடையவரே! பெருமானே! எருது ஏறுதல் உயர்வுடையது தானோ? கூறியருள்வீராக!

கடல் அலைகள் சங்குகளையும் இப்பிகளையும் கரையில் அடித்துத் தள்ளுகின்றன. அவை பொன் போல் விளங்கும் தாமரை மலர்கள் நிறைந்த வயல்களில் புகுகின்றன என்பது முதலிரண்டு அடிகளின் கருத்தாகும். வயல்களின் நீர் வளம் காட்டியவாறும் கண்டு கொள்க.

பூந்தராய் என்னும் இப்பதியில் தேவர்கள் சுற்றி நின்று இறைவனைத் தொழுகின்றனர். அத்தகைய பெருமை உடையவர் எருது ஏறுதல் உயர்வு தானோ என வினவினர்.

இப்பி—சங்கின் இனத்தில் ஒன்று; பெற்றம்—எருது; பெற்றிமை—தன்மை, இங்கு உயர்வு என்ற பொருளில் வந்த தாகக் கொள்க.

இறைவனார் எருது ஏறும் தன்மையை வினவிய திருவாசகப் பாடலும் கீழே காண்க. எருது ஏறுதல் இறைவர்க்குப் பெருமையே என்ற பதிலும் அப்பாடலில் கூறப் பட்டது காண்க.

கடகரியும் பரிமாவும் தேரும்உகந் தேருதே
இடபம்உகந்து ஏறியவா றெனக்கறிய இயம்பேடீ
தடமதில்க ளவைமூன்றும் தழலெரித்த அந்நாளில்
இடபமதாய்த் தாங்கினான் திருமால்காண் சாழலோ.

—திருவாசகம்:திருச்சாழல்—15.

சங்கு செம்பவ ளத்திரள் முத்தலை தாங்கொடு
பொங்கு தெண்டிரை வந்தலைக் கும்புனற் பூந்தராய்த்

துங்க மால்களிற் றின்னுரி போர்த்துகந் தீர்சொலீர்
மங்கை பங்கமும் அங்கத்தொ டொன்றிய மாண்பதே. 3

3. சங்கு, செம்பவளத்திரள், முத்து ஆகியவைகளைத் தாம் கொண்டு பொங்குகின்ற கடல் அலைகள் வந்து அலைக்கின்ற நீர் வளம் உடைய பூந்தராய் என்னும் இத்தலத்தில் (எழுந்தருளிய) உயர்ந்த பெரிய யானையின் தோலைப் போர்த்து உயர்ந்தவரே! உமாதேவியாரின் பாகமும் உமது திருமேனியில் ஒன்றாக இணைந்த பெருமையினை உரைத்தருள்வீராக.

முதலிரண்டு அடிகளால் பூந்தராயின் நீர் வளம் கூறினார். மூன்றாவது அடியில் யானை வடிவினனாகிய, தேவர்களை அலைத்த, கஜாசுரன் என்பவனின் தோலை உரித்துப் போர்த்துக் கொண்ட பேராற்றலைக் கூறி இறைவரை விளித்தார்.

நான்காவது அடியில் அர்த்தநாரீச்வரராக அதாவது மாதிருக்கும் பாதியனாக இருக்கும் பெருமையை வினவினார் என்று கண்டு கொள்க. இவ்வாறே ஒவ்வொரு திருப்பாடலிலும் மூன்றாவது அடியை விளியாகவும் நான்காவது அடியை வினாவாகவும் அமைத்தருளினார்.

சேம வன்மதில் பொன்னணி மாளிகை சேணுயர்
பூம ணங்கம ழும்பொழில் சூழ்தரு பூந்தராய்ச்
சோம னும்மர வுந்தொடர் செஞ்சடை யீர்சொலீர்
காமன் வெண்பொடி யாகக் கடைக்கண் சிவந்ததே. 4

4. காவலாக அமைந்த வலிய மதில்களும், பொன்னினால் அலங்கரிக்கப்பட்ட மாளிகைகளும், விண்ணில் மிக உயர்ந்தும் பூமணம் கமழ்தலையுடைய சோலைகளும் சூழ்ந்த பூந்தராய்ப் பதியில் (எழுந்தருளிய) பிறைச்சந்திரனும் பாம்பும் தொடர்ந்த செஞ்சடையுடையவரே! மன்மதன் சாம்பலாகும்படி உமது கடைக்கண் சிவந்ததன் காரணத்தைக் கூறியருள்வீராக.

வலிய மதில்களும், அழகிய மாளிகைகளும், நறுமணம் கமழும் உயர்ந்த பூம்பொழில்களும் சூழ்ந்த பூந்தராய் என முதலிரண்டு அடிகளில் நகரச்சிறப்பு கூறினர். வழக்கம் போல மூன்ருவது அடியில் பெருமானை அழைத்து நான்காவது அடியில் தமது வினவை அமைத்தருளினர்.

சோமன்—சந்திரன்; இங்குப் பிறைச்சந்திரன். அரவு—பாம்பு; சிவந்தது—கோபித்தது என்ற பொருளில் வந்தது. ''கறுப்பும் சிவப்பும் வெகுளிப்பொருள'' (தொல்காப்பியம் சொல்லதிகாரம், உரிச்சொல்—76).

இத்திருப்பாடலில் காமனை எரித்தது பற்றி வினவினர்.

பள்ள மீனிரை தேர்ந்துழ லும்பகு வாயன
புள்ளு நாடொறுஞ் சேர்பொழில் சூழ்தரு பூந்தராய்த்
துள்ளு மான்மறி யேந்திய செங்கையி னீர்சொலீர்
வெள்ள நீரொரு செஞ்சடை வைத்த வியப்பதே. 5

5. நீர் நிறைந்த பள்ளங்களில் இருக்கும் மீன்களை இரையாகத் தேர்ந்து அலையும் பிளந்த வாயுடைய நாரைகள் நாள்தோறும் வந்து தங்குகின்ற சோலைகள் சூழ்ந்த பூந்தராய்த் தலத்தில் (எழுந்தருளிய) துள்ளுகின்ற மான் கன்றினை ஏந்திய அழகிய திருக்கரத்தை உடையவரே! உமது செஞ்சடை மீது வெள்ளநீரினை (கங்கையினை) வைத்த வியப்பினைக் கூறியருள்வீராக.

இத்திருப்பாடலில் கங்கையைச் சடையில் தாங்கிய பேராற்றலை வினவினர். வேகமாகப் பாய்ந்து இறங்கி வந்த கங்கையின் பெருநீர்ப் பெருக்கினை உருத்தெரியாது தமது சடைக்குள் மறைத்து வைத்த ஆற்றலையே வியப்பு எனப் பிள்ளையார் கூறியருளினர்.

நாரை பிளந்த வாய் உடையது என்பதைப் பகுவாயன புள்ளும் என்று கூறி விளக்கினர். பகுவாய்—பிளந்த வாய். நாரையின் பிளந்த வாயைச் சத்திமுற்றப் புலவர் என்ற

செந்தமிழ்ப் புலவரும். ''பழம்படு பனையின் கிழங்கு பிளந் தன்ன, பவளக்கூர்வாய்ச் செங்கால் நாராய்'' எனப்பாடி உள்ளார்.

மாதி லங்கிய மங்கைய ராடம ருங்கெலாம்
போதி லங்கம லம்மது வார்புனற் பூந்தராய்ச்
சோதி யஞ்சுடர் மேனிவெண் ணீறணி வீர்சொலீர்
காதி லங்குழை சங்கவெண் தோடுடன் வைத்ததே. 6-7

6-7. அழகு விளங்குகின்ற மங்கையர்கள் ஆடுதலைச் செய்ய, பக்கங்களில் எல்லாம் மலரும் பருவத்துத் தாமரை மலர்கள் தேனினை ஒழுக்குகின்ற, நீர் வளமுடைய பூந்தராய்த் தலத்தில் (எழுந்தருளிய) சோதியின் அழகிய ஒளி விளங்கும் செம்மேனியின் மேல் வெண்ணீற்றினை அணி பவரே! உமது திருக்காதுகளில் குழையும், வெண் சங்கினா லான தோடும் உடன் வைத்ததன் உண்மையினைக் கூறி அருள்வீராக.

குழை—ஆண்களின் காதில் அணியும் ஆபரணம்; தோடு—பெண்கள் காதில் அணியும் ஆபரணம். இவற்றை ஒருங்கே வைத்தது புதுமையல்லவா? அதனைக் கூறுவீராக என வினவினர் என்று கொள்க.

சிவபிரானது அம்மையப்பனும் திருக்கோலத்தையே இத்திருப்பாடலிலும் வேறு வகையால் குறிப்பிட்டுப் பாடி அருளினர். அர்த்தநாரீச்வரத் திருக்கோலமே தொன்மைக் கோலம் எனக் கூறும் திருவாசகப் பாடல் கீழே காண்க.

தோலும் துகிலும் குழையும் சுருள்தோடும்
பால்வெள்ளை நீறும் பசுஞ்சாந்தும் பைங்கிளியும்
சூலமும் தொக்க வளையுமுடைத் தொன்மைக்
கோலமே நோக்கிக் குளிர்ந்தூதாய் கோத்தும்பீ.

—திருவாசகம் : திருக்கோத்தும்பீ—18

இத்திருப்பாடலில் குழையும் சுருள்தோடும் என வந்தது காண்க. மேலும் சுந்தரமூர்த்தி சுவாமிகள் தமது திருப்பனை யூர்த் திருப்பதிகம் முதல் பாடலில் "தோடு பெய்தொரு காதினிற்குழை தூங்க" என்று அருளிச் செய்ததும் அர்த்த நாரீச்வரத் திருக்கோலத்தையே குறித்ததாகும்.

வருக்க மார்தரு வான்கடு வன்னொடு மந்திகள்
தருக்கொள் சோலை தருங்கனி மாந்திய பூந்தராய்த்
துரக்கு மால்விடை மேல்வரு வீர்அடி கேள்சொலீர்
அரக்கன் ஆற்றல் அழித்தரு ளாக்கிய ஆக்கமே. 8

8. கூட்டமாகத் திரிகின்ற ஆண்குரங்குகளோடு பெண் குரங்குகளும் சோலைகளில் உள்ள மரங்கள் தருகின்ற கனி களை உண்டு இருக்கின்ற பூந்தராய்த் தலத்தில் (எழுந்தருளிய) செலுத்துகின்ற திருமாலாகிய விடையின்மீது வருவீராகிய அடிகளே! அரக்கனாகிய இராவணனது ஆற்றலை அழித்துப் பின்னர் அவனுக்கே அருள் தந்த ஆக்கப் பாட்டினைக் கூறி அருள்வீராக

இத்திருப்பாடலில் இராவணனை அவனது ஆற்றல் அழியச் செய்து, பின்னர் அவன் சாமகானம் பாடித் துதிக்க அதனால் மகிழ்ந்து அவனுக்கருள் செய்த ஆக்கத்தினை வின வினர்.

மால்விடை— திருமால் எருதின் வடிவாகி இறைவரைத் தாங்கியதை முன் 2-வது திருப்பாடல் விளக்கவுரையில் கொடுத்துள்ள திருவாசகம்—திருச்சாழல் பாடலினாலும் கண்டு கொள்ளலாம்.

ஆக்கம் — இச்சொல் செல்வம், உயர்தல், ஆக்குதல், வளர்ச்சி என்பன போன்ற பல பொருள்களைத் தரும்.

வரிகொள் செங்கயல் பாய்புனல் சூழ்ந்த மருங்கெலாம்
புரிசை நீடுயர் மாடநி லாவிய பூந்தராய்ச்

சுருதி பாடிய பாணியல் தூமொழி யீர்சொலீர்
கரிய மாலயன் நேடி உமைக்கண் டிலாமையே. 9

9. அழகிய நிறங்கொண்ட செம்மையான கயல் மீன் பாய்கின்ற நீர் சூழ்ந்ததும், பக்கங்களிலெல்லாம் நீண்டு உயர்ந்துள்ள மதிலும் மாடங்களும் நிலாவிய பூந்தராயில் (எழுந்தருளிய) வேதங்களைப் பாடிய பாட்டு இயலும் தூய மொழிகளையுடையவரே! கரிய நிறமுள்ள திருமாலும் பிரம தேவனும் உம்மைத் தேடிக் காணாமையினை உரைத்தருள் வீராக.

முதலிரண்டு அடிகளால் சீகாழியில் உள்ள மதில்கள், மாடமாளிகைகள் ஆகியவற்றின் நீளமும் உயர்வும், நீர்வள மும் அந்நீரிற்பாயும் மீன்களின் செழுமையும் உணர்த்தப் பட்டன. மூன்றாவது அடியில் வேத ஆகமங்கள் இறைவன் திருவாக்காதலின் சுருதி பாடிய பாணியல் தூமொழியீர் என விளித்தார்.

சுருதி—கேள்வி; வேதங்கள் எழுதாக்கிளவியாகி குரு-சீட பரம்பரையாகக் கேள்வியால் தொன்று தொட்டுப் பயிலப்பட்டு வருதலின் சுருதி என்று பெயர் பெற்றன.

பாண் இயல் தூமொழி— பாண் (பாட்டு) இயலும் மொழி அதாவது சந்த இசைகள் நிரம்பிய மொழி, தூய மொழி என வேதங்களைக் குறிப்பிட்டு அவைகளை மொழி பவரே! என இறைவனை விளித்தனர் என்க. வேதங்களில் ஏழு விதமான இசைகள் பயின்று வருகின்றன. அவைகளைப் பற்றி தமிழ் மாலை—8ல், பக்கம் 71, திருஓமமாம்புலியூர்ப் பதிகம் 6-வது திருப்பாடல் உரைப்பகுதியில் காண்க.

நான்காவது அடியில் திருமாலும் நான்முகனும் தேடிக் காண இயலாமையை வினவினர். நேடி—தேடி.

வண்ட லங்கழ னிம்மடை வாளைகள் பாய்புனல்
புண்ட ரீகம லர்ந்து மதுத்தரு பூந்தராய்த்

தொண்டர் வந்தடி போற்றிசெய் தொல்கழ லீர்சொலீர்
குண்டர் சாக்கியர் கூறிய தாங்குறி இன்மையே. 10

10. வண்டல் மண் நிரம்பிய அழகிய கழனிகளில் மடைகளில் வாளைகள் பாய்கின்ற நீரில் தாமரை மலர்கள் மலர்ந்து தேனினை ஒழுக்குகின்ற பூந்தராய்த் தலத்தில் தொண்டர்கள் வந்து திருவடி போற்றுகின்ற தொல் கழலீர்! குண்டர்களாகிய சமணர்கள், பௌத்தர்கள் ஆகிய புறப்புறச் சமயத்தார் கூறுபவைகளில் பொருளில்லாமை யின் காரணத்தை உரைத்தருள்வீராக.

வண்டல்—உரம் மிக்க மண். இது நீரின் வெள்ளத்தால் அடித்துக் கொண்டு வரப்படுவதாகும்.

மடை நீர் பாய்ச்சுவதற்குரிய மடை. முதலிரண்டு அடிகளால் சீகாழியின் வயல் வளமும் நீர் வளமும் கூறப் பட்டன வயல்களில் வண்டல் மண் நிறைந்திருக்கும் மடைகளில் நீர் நிறைந்து இருக்கும். அவைகளில் வாளைகள் பாயும்; தாமரைகள் மலர்ந்து தேனினைச் சொட்டும் என்ற தாம். மூன்றாவது அடியில் தொண்டர்கள் வந்து போற்று கின்ற திருவடி என்றும் தொன்மையான திருவடியென்றும் குறிப்பிட்டு இறைவனை விளித்தனர்.

தொல் கழல்—தொன்மையான திருவடி; கழல் என்பது வீரர்கள் அணியும் ஒரு வகைக் காலணியைக் குறித்து அதையணிந்த திருவடியைக் குறிக்கும்.

சமணர்களும் சாக்கியர்களும் கூறும் வார்த்தைகளில் உண்மைப் பொருள் இன்மையின் காரணத்தை வினவினர் என்க. குறி—இலட்சியம், இங்குப் பொருளின் மேல் நின்றது.

மகர வார்கடல் வந்தண வும்மணற் கானல்வாய்ப்
புகலி ஞானசம் பந்தன் எழில்மிகு பூந்தராய்ப்

பகவ னாரைப் பரவுசொன் மாலைபத் தும்வல்லார்
அகல்வர் தீவினை நல்வினை யோடுட னாவரே. *11*

திருச்சிற்றம்பலம்

11. சுறுமீன்கள் நிறைந்த கடல் வந்து பொருந்து கின்ற மணற்பிரதேசத்தில் கடற்கரைச் சோலைகளையுடைய **புகலி** என்னும் சீகாழி ஞானசம்பந்தன், அழகு மிகுந்த **பூந்தராய்க்** கோயில் கொண்ட பகவனாராகிய சிவபிரானைத் துதிக்கும் சொல்மாலையாகிய இப்பத்தும் வல்லவர்கள் தீவினையை அகல்வர். நல்வினையோடு உடனாவர்.

கானல் வாய்ப் புகலி—கடற்கரைச் சோலைகளின் அருகே உள்ள புகலி என்பதாம்.

பகவனார்—ஈச்வரத்தன்மை, வீர்யம், கீர்த்தி, செல்வம், ஞானம், வைராக்யம் இவ்வாறு குணங்களின் தொகுதி **பகம்** எனப்படும். இவற்றையுடையவன் **பகவன்**. இப்பெயர் முற்றிலும் சிவபெருமானுக்கே பொருந்தும் எனப் பெரியோர்கள் நிறுவியுள்ளனர். இதன் பெண்பால் பெயரான **பகவதி** என்பது துர்க்கையினையும் பார்வதியையும் குறித்தல் காண்க.

அகல்வர் தீவினை — தீவினையை அகல்வர். தீயவினைகள் இவர்களை வந்தணுக மாட்டா எனக் கொள்ளலுமாம்.

நல்வினையோடு உடன் ஆவர் — நல்வினையினின்றும் அகலாது அதனுடன் ஒன்றியிருப்பர் என்பதாம். நல்வினைகள் இவர்களை வந்தடைந்து இவர்களை என்றும் பிரியாது உடனிருக்கும் எனக்கொள்க.



உ

சிவமயம்

சிவனுண்டு பயமில்லை

திருப்பூந்தராய்—2

(சீகாழி)

பண்—காந்தார பஞ்சமம்] [3-ம் திருமுறை

மின்னன எயிறுடை விரவ லோர்கள்தந்
துன்னிய புரமுகச் சுளித்த தொன்மையர்
புன்னையம் பொழிலணி பூந்த ராய்நகர்
அன்னமன் னந்நடை அரிவை பங்கரே. 1·

1. மின்னலைப்போன்ற பற்களையுடைய பகைவர்களாகிய அசுரர்களின் நெருங்கிய மூன்று புரங்களும் அழிந்துபோகும் படி கோபித்த பழமையானவர், புன்னைமரச்சோலைகளினால் அழகுசெய்யப்பட்ட **திருப்பூந்தராய்** நகரில் (எழுந்தருளிய) அன்னம் போன்ற நடையழகினையுடைய உமாதேவியாரை ஒருபங்கிலே உடைய சிவபிரானேயாவர்.

துன்னியபுரம் உகச்சுளித்த தொன்மையர் பூந்தராய் நகர் அன்னமன்னந்நடை அரிவை பங்கரே என முடிக்க. இவ்வாறே பின்வரும் பாடல்களிலும் கொள்க. இத்திருப் பாடலிலும் பின்வரும் ஒவ்வொரு பாடலிலும் இறைவனார் முப்புரமெரித்த மாண்பினைக் கூறியருளினர்.

மின்னன எயிறு—அசுரர்கள் கரிய நிறம் வாய்ந்தவர் களாகையால் பற்களின் வெண்மையாகப் பிரகாசிப்பதை இங்ஙனம் கூறினார்.

விரவலோர்— பகைவர்கள், இங்கு முப்புரத்தவரைக் குறித்தது.

துன்னிய புரம்— முப்புரங்களும் ஒன்றாகச் சேர்ந்த பொழுதுதான் அவற்றிற்கு அழிவு என வரம் பெற்றிருந்த மையால் அவைகளை இறைவர் அழித்த போது ஒன்றாகச்

சேர்ந்திருந்தன என்பது குறிக்கத் துன்னிய புரம் என்ருர்.

துன்னிய—நெருங்கிய, ஒன்ருேடொன்று நெருக்கமாகச் சேர்ந்த.

தொன்மையர்—புராதனர், பழமையானவர்.

உக—அழிய, சுளித்தல்—கோபித்தல்.

அரிவை பங்கர் — உமாதேவியாரைப் பங்கிலே உடைய சிவபிரான்.

முதணி முப்புரத் தெண்ணி லோர்களை
வேதணி சரத்திஞல் வீட்டி ஞரவர்
போதணி பொழிலமர் பூந்த ராய்நகர்த்
தாதணி குழலுமை தலைவர் காண்மினே. 2.

2. பழமையாக அணிவகுத்தலையுடைய முப்புரத்தோரா கிய எண்ணிலாத அசுரர்களை வெம்மையுடைய ஒரு கணை யிஞல் அழித்தவராகிய அப்பெருமான், மலர்களால் அழகு செய்யப்பட்ட சோலைகளையுடைய திருப்பூந்தராய் நகரில் எழுந்தருளிய மகரந்தப் பொடிகளையுடைய கூந்தலுடைய உமாதேவியாரின் நாயகரான சிவபெருமானேயாவர் என் பதை அறிவீர்களாக.

இறைவஞர் முப்புரம் எரிக்கச்சென்ற போது அவருக்கு திருமால், வாயு, தீக்கடவுள் ஆகிய மூவரும் ஒன்று சேர்ந்து அம்பாயினர். அம்பின் நுனிப்பாகம் நெருப்பு ஆகையால் வேது அணி சரம் அதாவது வெம்மையுடைய அம்பு எனப்பட்டது. அம்பின் இடைப்பாகம் திருமாலும், அடிப்பாகம் வாயுவுமாக அமைந்தனர் என்பது ஈண்டு அறிதற்பாற்று.

உமாதேவியார் கூந்தலில் அணிந்த மலர்களின் மகரந்தப் பொடிகள் உதிர்ந்து கூந்தலை அழகு செய்தமை யால் தாது அணி குழலுமை எனக் கூறிஞர்.

காண்மின் என்றது அறிந்து கொள்ளுங்கள் என்ற பொருளில் வந்தது.

தருக்கிய திரிபுரத் தவர்கள் தாம்உகப்
பெருக்கிய சிலைதனைப் பிடித்த பெற்றியர்
பொருக்கடல் புடைதரு பூந்த ராய்நகர்க்
கருக்கிய குழலுமை கணவர் காண்மினே. 3.

3. இறுமாப்படைந்த முப்புரத்தவர்கள் அழியும்படி பெரியதாகிய மேருவாகிய வில்லினைப் பிடித்த பெருமை உடையவர், கரைகளை மோதுகின்ற கடலின் பக்கத்தில் அமைந்த திருப்பூந்தராய் நகரில் கருமையான குழலையுடைய உமாதேவியாரின் கணவராகிய சிவபெருமானேயாவர் என்பதை அறிந்து கொள்ளுங்கள்.

பெற்றி —தன்மை, இங்குப் பெருமையைக் குறித்தது. பெருகிய, பொருகடல், கருகிய என்ற மூன்றும் முறையே பெருக்கிய, பொருக்கடல், கருக்கிய என எதுகை நோக்கி 'க' கர ஒற்று பெற்று வந்தன.

நாகமும் வரையுமே நாணும் வில்லுமா
மாகமார் புரங்களை மறித்த மாண்பினர்
பூகமார் பொழிலணி பூந்த ராய்நகர்ப்
பாகமர் மொழியுமை பங்கர் காண்மினே. 4.

4 வாசுகி என்னும் பாம்பும் மேரு மலையும் முறையே நாணும் வில்லுமாகக்கொண்டு வானத்திற் பொருந்திய முப்புரங்களையும் தடுத்து அழித்த பெருமையுடையவர், பாக்குமரங்கள் பொருந்திய சோலைகளால் அழகு செய்யப் பட்ட திருப்பூந்தராய் நகரில் கோயில்கொண்ட பாகு போன்ற இனிய மொழிகளைப் பேசுதலையுடைய உமாதேவி யாரை ஒரு பங்கிலே கொண்ட சிவபிரானேயாவர் என் பதைத் தெரிந்துகொள்ளுங்கள்.

திரிபுரங்களை மேற்சென்று உலகை வருத்தாது தடுத்து அழித்தமையால் மறித்த எனக்கூறினர். மறித்தல் என்ற சொல் தடுத்தல், திருப்புதல், காவற்படுத்தல் போன்ற பொருள்களைத் தரும்.

வெள்ளெயி றுடையவவ் விரவ லார்களூர்
ஒள்ளெரி யூட்டிய ஒருவ னூரொளிர்
புள்ளணி புறவினிற் பூந்த ராய்நகர்க்
கள்ளணி குழலுமை கணவர் காண்மினே. 5.

5. வெண்மையான பற்களையுடைய அப்பகைவர்களாகிய திரிபுரத்தவர்களின் ஊர்களை ஒள்ளிய எரியானது உண்ணும்படி செய்த ஒப்பற்றவராகிய பெருமான், ஒளிர்கின்ற பறவைகள் அழகு செய்கின்ற கடற்கரைச் சோலையில் **திருப்பூந்தராய்** நகரில் தேன் நிறைந்த மலர்களால் அழகு செய்யப்பட்ட குழலையுடைய உமாதேவியாரின் கணவராகிய சிவபெருமானேயாவர் என்பதைத் தெரிந்து கொள்வீர்களாக.

வெள் எயிறு— வெண்மையான பற்கள், அசுரர்கள் கருமை நிறம் உடையவர்களாதலின் கருமையில் வெண்மையான பற்கள் மிக விளக்கமாகத் தோன்றும். எனவே **வெள்ளெயிறு** எனப் பற்களைக் குறிப்பிட்டார் எனக்கொள்க.

ஒளிர் புள்—பல நிறங்களையுடைய பறவைகள் பறக்கும் போது மிகவும் ஒளியுடையவையாகத் தோற்றம் அளிக்கும். எனவே **ஒளிர்புள்** எனக் கூறியருளினார். ஒளிர்தல்-மின்னுதல் என்ற பொருள் கொண்டது.

ஒருவனூர்—ஒப்பற்றவராகிய சிவபெருமான்.

புறவு—இச்சொல்லுக்கு மலையைச் சார்ந்த காடு, காடு சார்ந்த இடமாகிய முல்லை எனப் பெரும்பான்மை பொருள் காணப்படினும் இங்குக் கடற்கரைச்சோலை எனப் பொருள் கொள்ளப்பட்டது. முன் பாடல்களில் **பொரு கடல் சூழ்** என்றும், **புன்னையம் பொழில் அணி** என்றும் கூறப் பட்டிருத்தல் காண்க. புன்னை நெய்தல் நிலத்து (கடலும் கடல் சார்ந்த இடம்) கருப்பொருளாகும். சீகாழியை வயல்கள் சூழ்ந்த நகராக வருணித்துள்ள பிள்ளையார், கானல் ஆர் கடிபொழில் (கடற்கரையினைச் சார்ந்த

பொழில்) சூழ்ந்த காழியாகவும் பாடியுள்ளார் என்பது கருதத்தக்கது.

இவ்வாறின்றிச் சீகாழியின் பன்னிரு திருப்பெயர்களில் ஒன்றான புறவம் என்பதையே புறவு எனக் குறிப்பிட்டார் எனக் கொள்ளலுமாம்.

துங்கியல் தானவர் தோற்ற மாநகர்
அங்கியில் வீழ்தர வாய்ந்த அம்பினர்
பொங்கிய கடலணி பூந்த ராய்நகர்
அங்கய லனகணி அரிவை பங்கரே. 6.

6. இருளின் தன்மையுடைய அசுரர்களின் தோற்றத்தையுடைய பெரிய நகரங்களைத் தீயினில் வீழ்ந்து எரியும்படி ஆராய்ந்து செலுத்திய அம்பினையுடையவர், பொங்குகின்ற கடல் அழகு செய்கின்ற திருப்பூந்தராய் நகரில் எழுந்தருளியுள்ள அழகிய கயல்மீனை ஒத்த கண்ணியாகிய உமாதேவியாரை ஒரு பங்கிலே உடைய சிவபிரானேயாவர்.

துங்கி—இருள்; **இயல்**—தன்மை; இருளின் நிறத்தைக் கொண்ட அசுரர்கள் என்று அசுரர்களுக்கு அடையாகக் கொண்டோம்.

துங்கு+இயல்—இவ்வாறு பிரித்தனர் திருத்தருமபுரக் குறிப்பாசிரியர். **துங்கம்** என்பதன் கடைக்குறை **துங்கு** என்பதாம். இவ்வாறாயின் அசுரர்களின் பெருத்த உருவத்தின் மட்டிலேயே இவ்வடைமொழி கொள்ளப்படும். அசுரர்களின் பெருத்த உருவம் போல் பெரியதாகத் தோற்றமளித்த முப்புரங்கள் எனக்கொள்க.

அங்கயல் அன கணி—அழகிய கயல்மீன் அன்ன கண்ணி அதாவது கண்ணையுடைய உமாதேவியார்.

அண்டர்க ளுய்ந்திட அவுணர் மாய்தரக்
கண்டவர் கடல்விட முண்ட கண்டனார்

புண்டரீ கவ்வயற் பூந்த ராய்நகர்
வண்டமர் குழலிதன் மணாளர் காண்மினே. 7.

7. தேவர்கள் வாழ்ந்திடவும் அசுரர்கள் மாய்ந்திடவும் செய்தவர், கடலில் தோன்றிய நஞ்சினை உண்டவர், (இத்தகைய பெருமையுடையவர்) தாமரைமலர்கள் மலர்ந்த வயல்கள் நிறைந்த திருப்பூந்தராய் நகரில் (எழுந்தருளியுள்ள) வண்டுகள் அமர்கின்ற கூந்தலையுடைய உமாதேவியாரின் கணவரேயாவர் என்பதை அறிந்து கொள்ளுங்கள்.

அண்டர்கள் உய்ந்திட அவுணர் மாய்தரக் கண்டவர் எனப் பொது வகையாற் கூறினரேனும் முற்பாடல்களில் கூறியவற்றின் தொடர்ச்சியை முன்னிட்டு முப்புரத்தசுரர்களை அழித்த வரலாற்றினையே கூறியருளினர் எனக் கொள்க.

வண்டமர்குழல்— உமாதேவியாரது கூந்தலில் சூடியுள்ள புதிய மலர்களின் தேனையுண்ண வண்டுகள் வந்து சேருகின்றனவாதலால் இங்ஙனம் கூறினர்.

மணாளர் — மணவாளர், நாயகர்.

மாசின அரக்கனை வரையின் வாட்டிய
காய்சின எயில்களைக் கறுத்த கண்டனர்
பூசுரர் பொலிதரு பூந்த ராய்நகர்க்
காசைசெய் குழலுமை கணவர் காண்மினே. 8.

8. மிகுந்த கோபமுடையவனான இலங்கை அரக்கர் வேந்தனான இராவணனைக் கயிலை மலையின் கீழ் (நசுங்கி) வாடும்படி செய்தவர், பிறரைத் துன்புறுத்தும் கோபத்தை உடைய மும்மதில்களைக் கோபித்த வீரர் (இத்தகைய பெருமை வாய்ந்தவர்) பூவுலகில் தேவர்கள் போன்ற அந்தணர்கள் விளக்கத்துடன் இருந்த திருப்பூந்தராய் நகரில் (எழுந்தருளியுள்ள) காயாம்பூ போன்ற கருநிறமுடைய கூந்தலையுடைய உமாதேவியாரின் கணவராகிய சிவபிரானே யாவர் என்று அறிந்து கொள்ளுங்கள்.

மாசின — மா - பெரிய, சின - கோபமுடைய எனவே பெருங்கோபமுடைய என யாம் பொருள் கொண்டோம். இவ்வாறின்றி மாசு + இன் + அ எனப்பிரித்து 'மாசினை உடைய அதாவது பாவத்தையுடைய பாவியாகிய' எனப் பொருள் கொண்டனர் திருத்தருமபுரக் குறிப்புரை ஆசிரியர்.

காய்சின — துன்பத்தைத் தரும் கோபமுடைய.

காய்தல் — துன்புறுத்துதல். காய்தல் என்ற சொல்லே கோபம் என்ற பொருளைத் தருமாதலின் காய்சினம் என்பதற்கு மிகுந்த கோபம் எனக் கொள்க.

காய்சின எயில்கள் — எயில்களையுடையோரது காய் சினம் எயில்களின் மீது ஏற்றிக் கூறப்பட்டது.

எயில்— மதில். இங்கு மும்மதில்கள்.

கண்டனூர்— கண்டன் என்ற சொல்லுக்கு எசமான், நாயகன், வீரன், சோழன் என்ற பொருள்கள் காணப்படுகின்றன. மூவெயில்களைக் கறுத்த கண்டன் என்றதால் வீரன் எனப் பொருள் கொண்டோம். ஆர் என்ற சிறப்புப் பன்மை விகுதி சேர்த்து கண்டனூர் எனக்கூறியருளினூர் எனக் கொள்க.

இங்ஙனமன்றிக் கண்டனூர் என்பதற்குத் தண்டத்தை உடையவர், அரசன் குற்றத்தைக் கண்டித்தான் என்றதில் வரும் கண்டித்தல் என்பது போல, என்று திருத்தருமபுர ஆதீன உரைக் குறிப்பில் காணப்படுகிறது.

பூசுரர் — பூவுலகத்தில் தேவர்கள். அக்காலத்து அந்தணர்களைக் குறித்தது. தேவர்களைப் போன்று தெய்விகமான நற்குணங்களுடன் திகழ்ந்தனர் என்பதால் அங்ஙனம் கூறினூர் எனக் கொள்க.

காலை — காயாம்பூ. (கருநிறமுடையது).

செய் — இங்கு 'போல' எனப்பொருள்படும் உவம வாசகம்.

தாமுக மாக்கிய அசுரர் தம்பதி
வேமுக மாக்கிய விகிர்தர் கண்ணனும்
பூமகன் அறிகிலாப் பூந்த ராய்நகர்க்
கோமகன் எழில்பெறும் அரிவை கூறரே. 9.

9. தாங்கள் தங்களது முகம் போல் சிறப்புடையதாகக் கொண்ட அசுரர்களுடைய மூன்று பட்டணங்களும் தீயினால் வேகும் இடமாகச் செய்த விகிர்தர், கண்ணனாகிய திருமாலும், நான்முகனும், அறியவொண்ணாதவர், திருப்பூந்தராய் நகரில் எழுந்தருளியுள்ள தலைவர். (இவரே) எழில்மிக்க உமாதேவியாரை ஒரு கூறாக உடைய சிவபிரானாவர்.

முகம் முதல் அடியில் சிறப்புடையது என்னும் பொருளிலும், இரண்டாமடியில் இடம் என்ற பொருளிலும் வந்தது. திருத்தருமபுர உரைக்குறிப்பில் கண்டது.

விகிர்தர்— உலகியலினின்றும் மாறுபட்ட தன்மையுடையவர், இறைவர்.

கோமகன்—தலைவன்; அரிவை — பெண், இங்கு உமாதேவியாரைக் குறித்தது. கூறர் — பாகமாக உடையவர்.

முத்தர அசுரர்கள் மொய்த்த முப்புரம்
அத்தகும் அழலிடை வீட்டி னார்அமண்
புத்தரும் அறிவொணாப் பூந்த ராய்நகர்க்
கொத்தணி குழலுமை கூறர் காண்மினே. 10.

10. மூன்று வகையினராகிய அசுரர்கள் மிகுந்த மூன்று புரங்களும், அத்தகைய தக்க நெருப்பின் இடையில் சிக்கி எரியும்படி செய்து அழித்தவர். சமணரும் புத்தரும் அறியவொண்ணாதவர். (இவரே) திருப்பூந்தராய் நகரில் எழுந்தருளியுள்ள பூங்கொத்துக்களை அணிந்த கூந்தலையுடைய

உமாதேவியாரை ஒரு பாகமாகக் கொண்ட சிவபிரான் என்று தெரிந்து கொள்ளுங்கள்.

முத்தர அசுரர்கள்—இரும்பு, வெள்ளி, பொன் என்று கோட்டைகள் மூன்றுதலால் அவைகளையுடைய அசுரர் களையும் முத்தரஅசுரர்கள் எனக் கூறினர்.

அத்தகுமழல்— அ+தகும்+அழல்—அதாவது மூன்று புரங்களையும் ஒருங்கே அழிக்கக்கூடிய அந்தத் தகுதியினை உடைய அழல். இது இறைவனாரின் நெற்றிக் கண்ணி னின்றும் தோன்றியதாம். இறைவனார் சிரித்துப் புரமெரித்த தாகவும் கூறுதல் உண்டு.

வீட்டினர்—அழித்தார்

புரமெரி செய்தவர் பூந்த ராய்நகர்ப்
பரமலி குழலுமை நங்கை பங்கரைப்
பரவிய பந்தன்மெய்ப் பாடல் வல்லவர்
சிரமலி சிவகதி சேர்தல் திண்ணமே.

திருச்சிற்றம்பலம்

11. மூன்று புரங்களையும் எரியும்படிச் செய்தவரான திருப்பூந்தராய் நகரில் எழுந்தருளியுள்ள, அடர்த்தியான கூந்தலையுடைய உமாதேவியாரை ஒரு பங்கிலே உடைய சிவ பிரானாரைத் துதித்துப் பாடிய திருஞானசம்பந்தனின் மெய்ப்பாடலை (பாட) வல்லவர்கள், மிக்க உயர்நிலையதாகிய சிவகதியினை அடைதல் உறுதியாகும்.

பரம்மலி குழல்— பரம் என்ற சொல் கனம், சுமை என்ற பொருள்களில் வந்தது. உமாதேவியாரின் கூந்தல் மிக்கு அடர்ந்தும் நீண்டும் இருந்தமையால் அதனைப் பாரம்(கனம்) மிக்க குழல் என்று கூற பரம்மலி குழல் எனக்கூறினர். கூந்தல் அளகபாரம் என்று வழங்கப்படுதலுங் காண்க.

பந்தன்— சம்பந்தன். மெய்ப்பாடல் — உண்மையான வேத வாய்மையினை விளக்கும் பாடல்; மெய்ப்பொருளான இறைவரையே பாடும் பாடல்.

சிரமலி—சிரம் என்ற சொல் 'தலை' என்ற பொருள் மட்டுமல்லாது உயர்ச்சி, மேன்மை என்ற பொருள்களும் தரும். எனவே **சிரமலி** என்பதற்கு உயர்நிலையதாகிய எனப் பொருள் கொண்டோம். சிவகதியடைவதே மிகவும் உயர்ந்த நிலை என்பதாம்.

திண்ணம்—நிச்சயம், உறுதி.

இத்திருப்பதிகத்தின் ஒவ்வொரு பாடலிலும் சிவபிரான் முப்புரமெரித்த வரலாற்றினைப் போற்றிப்பாடி, அதே முறையில் திருக்கடைக்காப்பிலும் புரமெரி செய்தவர் என்று அந்தப்பெருமையினையே கூறியருளினார். முப்புரத்தை எரி செய்த வீரம் பெரும் வீரமாதலால் அதனை இவ்வாறு போற்றினார் என்க. முப்புரம் எரி செய்த வரலாறு தனியாகத் **திருமுறைகளில் புராண வரலாறுகள்** என்ற தலைப்பில் இடம் கிடைக்கும் போது வெளியிடப்படும்.

சிவம்

சிவஞான பூஜா மலர்

ஆசிரியரது **சிவபுராணப் பிரசங்க** ஞானபூஜையின் மணி விழா மலராக விரைவில் வெளிவரும். வேதங்கள், புராணங்கள், இதிஹாஸங்கள் ஆகிய அனைத்து நூல்களின் பொருள் சிவபிரானாரே என்பதை விளக்கும் அரிய மலராகப் பல பேரறிஞர்களுடைய கட்டுரைகளுடன் வெளிவரும். இம்மலரின் மூலம் கிடைக்கும் பணம் நமது தமிழ் மாலை வளர்ச்சிக்குப் பயன் படுத்தப்படும் சைவ மெய்யன்பர்களின் பேராதரவினை வேண்டுகிறோம்.

—ஆசிரியர்.

உ

சிவமயம்

சிவனுண்டு பயமில்லை

திருப்பூந்தராய்—3

(சீகாழி)

பண்—காந்தார பஞ்சமம்] ஈரடிமேல்வைப்பு [3-ம் திருமுறை

திருச்சிற்றம்பலம்

தக்கன் வேள்வி தகர்த்தவன் பூந்தராய்
மிக்க செம்மை விமலன் வியன்கழல்
சென்று சிந்தையில் வைக்க மெய்க்கதி
நன்ற தாகிய நம்பன் தானே. 1

1. **தக்கன்** செய்த யாகத்தினை அழித்தவனாகிய **திருப்பூந்தராய்** மேவிய மிக்க செம்மேனியனாகிய விமலனது (சிவபிரானது) பெருமையுடைய திருவடிகளை அணுகிச் சென்று உமது சிந்தையில் வைப்பீர்களாக. நன்மையைத் தருபவனாகிய அந்த நம்பனே நமக்கு உண்மையான புகலிடமாவார்.

தக்கன்—பிரமதேவனது புத்திரர்களில் ஒருவன். இவன் சிறு விதி எனவும் உபப்பிரம்மா எனவும் வழங்கப்படுவான். தக்கனது வேள்விபற்றிக் கந்தபுராணம் தக்ஷகாண்டம் மிகவும் விரிவாகக் கூறும். நமது தமிழ் மாலையிலும் இடவசதிக்கேற்ப உரிய காலத்தில் வெளியிடப்படும்.

மிக்க செம்மை — செம்மேனி எம்மான் சிவன் என்பதாம். இவ்வாறின்றி செம்மை என்பதற்கு வீட்டுநெறி எனக்கொண்டு 'மேலான வீட்டு நெறியை அருளும் 'விமலன்' எனப்பொருளுரைத்தனர் திருத்தருமபுர ஆதீனக் குறிப்புரை ஆசிரியர்.

விமலன்—இயல்பாகவே பாசங்களினின்றும் நீங்கியவன். இது இறைவனது எண்பெருங்குணங்களில் ஒன்றாகும். இது வேயன்றி **விமலம்** என்ற சொல்லுக்கு அழகு, வெண்மை என்ற பொருள்களும் உள்ளனவாகையால் அழகுடையவன் என்றும் வெண்மை நிறமுடையவன் (செம்மேனி மீது வெண்ணீற்றுப் பூச்சினால்) என்றும் கூறலாம்.

வைக்க—வைப்பீர்களாக; முன்னிலை ஏவல் வினைமுற்று வையுங்கள் என்ற பொருளைத்தரும்.

மெய்க்கதி—உண்மையான புகலிடம் (சரணமடைய வேண்டிய இடம்)

நன்றதாகிய நம்பன்—நன்மையைத் தருபவனாகிய நம்பன். **நம்பன்**—உயிர்களால் விரும்புதற்குரியவன்; நமது பிரான் எனப் பொருள்படும் **நம்பிரான்** எனக் கொள்ளலு மாம்.

சிவபிரானது திருவடிகளே உயிர்கள் சரணடைதற்கு உரியவை என்பது கருத்து.

புள்ளி னம்புகழ் போற்றிய பூந்தராய்
வெள்ளம் தாங்கு விகிர்தன் அடிதொழ
ஞாலத் தில்உயர் வார்உள்கும் நன்னெறி
மூலம் ஆய முதலவன் தானே. 2

2. பறவையினங்களும் புகழ்ந்து போற்றிய **திருப் பூந்தராய்** (எழுந்தருளிய) கங்கை வெள்ளத்தினைத் தாங்கும் இறைவனது திருவடிகளைத் தொழ (அதுவே) இவ்வுலகத்தில் உயர்வடைதலை விரும்புபவர்கள் சிந்திக்கும் நன்னெறி யாகும். (ஏனெனில்) அனைத்து நன்மைகட்கும் மூல காரண மாகிய முதற்பொருளாயிருப்பவன் அவனேயாகும்.

அனைத்துக்கும் மூலமாயிருப்பவன் சிவபிரானேயாதலின் திருப்பூந்தராய் மேவிய அவனைத் தொழுதலே உலகத்தில்

உயர்வடைய முயலுபவர்கள் சிந்திக்கும் நன்னெறியாகும். எனவே நீவிரும் அவனைத் தொழுது உயர்வடையுங்கள் என உலகர்க்கு அறிவுறுத்தியது கண்டு கொள்க.

பூந்தராய்த் தலத்தை அடியார்கள் போற்றிப் புகழ்கின் றனர். அப்புகழ் மொழிகளைக் கேட்ட கிளி, பூவை முதலிய புள்ளினங்கள் தாமும் அவ்வாறே போற்றிப் புகழ்கின்றன என்பது முதலடியின் கருத்து. திருத்தருமபுரக் குறிப்புரை யாசிரியர் அழகிய இக்கருத்தினைக் குறிப்பிட்டுள்ளார்.

வேந்த ராய் உலகாள விருப்புறின்
பூந்த ராய்நகர் மேயவன் பொற்கழல்
நீதி யால்நினைந் தேத்தி உள்கிடச்
சாதியா வினை யான தானே. 3

3. அரசராகி உலகை ஆள விரும்பினால் (மக்களே!) நீங்கள் **திருப்பூந்தராய்** நகரில் விரும்பி எழுந்தருளியுள்ள சிவ பிரானது பொன்னார் திருவடிகளைத் தொழுங்கள். (தொழுத லால் உலகாளலாம் என்பது கருத்து). மேலும் அத்திருவடி களை விதி முறையால் நினைத்து, துதித்துத் தியானித்தால் வினைகளானவைத் தமது காரியத்தைச் செய்யா. (வினைகள் தம் தொழிலைச் செய்யாமையால் பிறப்பு அறும், வீடு பேறு கிட்டும் என்பதாம்).

நினைத்து ஏத்தல்—மனதால் நினைத்து வாயினால் துதித் தல். வாக்கும் மனமும் ஒன்றுபட்டுத் துதித்தல் என்றதாம்
உள்குதல்—தியானித்தல், நிஷ்டை கூடுதல்.

அரச பதவி வேண்டுமா? பூந்தராய்ப் பெருமானின் பொற்கழல்களைப் பேணுங்கள். விரும்பிய வண்ணம் பதவி அடையலாம். அது மட்டுமல்ல, பிறப்பிறப்பில்லாப் பேரின்பமுமடையலாம் என்று உலக மக்களுக்கு அறிவுறுத்தி அருளியது கண்டு கொள்க.

பூசு ரர்தொழு தேத்திய பூந்தராய்
ஈசன் சேவடி யேத்தி இறைஞ்சிடச்

சிந்தை நோயவை தீர நல்கிடும்
இந்து வார்சடை யெம் இறையே. 4

4. பூமியில் தேவர்கள் எனப்படும் அந்தணர்கள் தொழுது ஏத்திய திருப்பூந்தராய் மேவிய ஈசனாரது சிவந்த திருவடிகளைத் துதித்து வணங்கிடச் சந்திரனை அணிந்த நீண்ட சடையினையுடைய அப்பெருமான் நமது மனத்தின்கண் உள்ளவைகளான நோய்கள் அனைத்தையும் தீரும்படி அருள் புரிவன்.

பூசுரர்—அந்தணர், முன்னர் எழுதியுள்ள விளக்கங்களையும் காண்க.

சிந்தை நோய்—இங்கு மனக்கவலைகளைக் குறித்தது. மனக் கவலைக்கு மருந்து ஈசன் திருவடிகளைத் தொழுதலேயாம் என்பது கருத்தாகக் கொள்க.

தனக்குவமை இல்லாதான் தாள்சேர்ந்தார்க் கல்லால்
மனக்கவலை மாற்றல் அரிது.

—திருக்குறள் : கடவுள் வாழ்த்து—7

என்ற வள்ளுவர் வாய்மையும் இங்கு ஒப்பு நோக்குதற் குரியது. இக்குறளுக்குப் பரிமேலழகர் உரையில் **மனக்கவலை** என்பதற்கு **மனத்தின்கண் நிகழுந்துன்பங்கள்** என உரை வகுத்துள்ளார். மேலும் விளக்கத்தில் ''தாள் சேராதார் பிறவிக்கேதுவாகிய காம வெகுளி மயக்கங்களை மாற்ற மாட்டாமையின், பிறந்து அவற்றான் வரும் துன்பங்களுள் அழுந்துவரென்பதாம்' என்று கூறியுள்ளதும் கருதற்பாலது.

பொலிந்த என்பணி மேனியன் பூந்தராய்
மலிந்த புந்தியர் ஆகி வணங்கிட
நுந்தம் மேல்வினை யோட வீடுசெய்
எந்தை யாயஎம் மீசன் தானே. 5

5. திருப்பூந்தராய்த் தலத்தில் விளக்கத்துடன் எழுந்தருளிய எலும்பினையணிந்த திருமேனியனாகிய சிவபிரானைப்

பெரும் உள்ளங்கொண்டவராகி வணங்கிட, உங்கள் மேல தான வினைகள் ஓட விடுதலை செய்தருளும் எந்தையாகிய எமது ஈசன் அவனேயாகும். அவனே வினைகளைப் போக்கி வீடு நல்கிடும் பெருமானுகும் என்றபடி,

பூந்தராய் பொலிந்த என்பணி மேனியன் எனக்கூட்டிப் பொருள் கொள்க. எலும்பு—பிரம்ம விஷ்ணுக்களின் தசை கழிந்த எலும்புக்கூடு. கங்காளம் என்றுங்கூறுப. இதனைப் பின்வரும் திருவாசகப்பாடலாலும் அறிந்து கொள்க.

நங்காயி தென்னதவம் நரம்போ டெலும்பணிந்து
கங்காளந் தோள்மேலே காதலித்தான் காணேடி
கங்காளம் ஆமாகேள் காலாந்தரத் திருவர்
தங்காலஞ் செய்யத் தரித்தனன்காண் சாழலோ.

—திருவாசகம் - திருச்சாழல்—11

இப்பாடலில் எலும்பு என்று தனியாகக் கூறி, பிரம்ம விஷ்ணுக்களின் எலும்புக் கூடாகிய கங்காளத்தையும் கூறி யுள்ளார். இறைவனர் எலும்பும் எலும்புக்கூடும் தரிக்கும் உண்மையினை உரைப்போம். எலும்பு, நரம்பு, ஆமையோடு முதலியன மாண்டொழிந்த பல தேவர்களின் உடம்பில் உள்ள பொருள்களாகும். அவர்கள் இறந்த பின்னரும் தான் என்றும் இறவாதிருக்கும் தனது நிலையினைக் காட்டும் அடை யாளமே இவைகளை இறைவன் தரித்ததாகும். கங்காளம் என்பது பிரம விஷ்ணுக்களின் தசை கழிந்த முழு எலும்புக் கூடு. பிரம்ம விஷ்ணுக்களின் காலமுடிவினைச் சிவபிரானே செய்தருளுவார். அவ்வடையாளமே முழு எலும்புக்கூட்டினை இறைவனர் அணிதலாகும் என அறிந்து கொள்க.

மலிந்த புந்தியர் — மலிந்த என்னும் சொல் இங்கு மிகுந்த என்ற பொருளில் வந்தது. **புந்தி**—மனம். எனவே மிகுந்த மனத்துடன் அதாவது பெரும் உள்ளத்துடன் எனக் கொண்டு எம்மால் பொருள் உரைக்கப்பட்டது.

நுந்நம்—உங்களுடைய (நும்+தம்).

மேல்வினை ஓட வீடு செய்— இங்கு மேல் வினை என்றது ஏற்கெனவே நம்மீது உள்ளதான சஞ்சிதம் என்னும் வினையையும், இனிமேல் வரக்கடவதாகிய ஆகாமிய வினையையும் குறிக்கும். இவ்விரண்டினையும் இறைவனார் ஒழிக்க, பிராரப்த வினையினை நாம் அனுபவித்துக் கழிக்க, இனி எஞ்சும் வினை ஒன்றுமில்லையாம். வினை இன்றேல் பிறப்பும் இல்லை. எனவே வீடு செய் எனக் கூறியருளினார் என்க.

ஈசன் தானே— இங்ஙனம் வீடு பேறு அளிப்பவர் சிவ பிரானேயாவர். அவரே நாம் சரணமடைவதற்குரியவர் என்று கூறியவாறு.

பூதம் சூழப் பொலிந்தவன் பூந்தராய்
நாதன் சேவடி நாளும் நவின்றிட
நல்கும் நாள்தொறும் இன்பம் நளிர்புனல்
பில்கு வார்ச டைப்பிஞ் ஞகனே. 6

6. பூதங்கள் சூழ்ந்திட மிக்க விளக்கத்துடன் கூடிய வனாகிய திருப்பூந்தராய் எழுந்தருளிய தலைவனாகிய சிவ பிரானது சிவந்த திருவடிகளை எக்காலத்தும் போற்றிப் புகழ்ந்திட, குளிர்ந்த கங்கை நீர் சொட்டுகின்ற நீண்ட சடையினையுடைய பிஞ்ஞகனாகிய அப்பெருமானே நமக்கு எல்லா நாட்களும் இன்பத்தை அருள்புரிவான்.

நாள் தொறும்— ஒவ்வொரு நாளும் அதாவது எல்லா நாட்களும்.

பில்குதல் — சொட்டுதல். **பிஞ்ஞகன்** — தலைக்கோலம் உடையவன்.

புற்றின் நாகம் அணிந்தவன் பூந்தராய்
பற்றி வாழும் பரமனைப் பாடிடப்
பாவம் ஆயின தீரப் பணித்திடுஞ்
சேவ தேறிய செல்வன் தானே. 7

7. புற்றில் வாழும் பாம்பினைப் பூணாக அணிந்தவனும், திருப்பூந்தராய் நகரில் விருப்பமொடு எழுந்தருளியிருப்பவனு மாகிய பரமனை நாம் துதித்துப் பாடிட, எருது ஏறிய செல் வனாகிய அப்பெருமான் நமது பாவங்கள் ஆன அனைத்தும் தீரும்படி பணித்தருளுவான்.

சிவபிரான் அணியும் பாம்புகளை இனம் பற்றி புற்றின் நாகம் எனக் கூறினதாகக் கொள்க.

பரமன்—அனைவருக்கும் மேலான கடவுள்.

தீர—தீரும்படி, அதாவது நம்மை விட்டு ஒழியும்படி பணித்தல்—ஆணையிடுதல். (கட்டளை இடுதல்).

பாவம் ஆயின—மனம், வாக்கு, காயம் என்ற இம் மூன்றினாலும் செய்யப்படும் பாவங்கள். 9-ம் தமிழ் மாலை யில் திருநாரையூர்த் திருப்பதிகம்—3ல் முதல் திருப்பாடல் உரையையும் இங்கு ஒப்பு நோக்கிக் காண்க.

போத கத்துரி போர்த்தவன் பூந்தராய்
காத லித்தான் கழல்விரல் ஒன்றினால்
அரக்கன் ஆற்றல் அழித்தவ னுக்கருள்
பெருக்கி நின்ற எம்பிஞ் ஞகனே. 8

8. யானையின் தோலை உரித்துப் போர்த்துக் கொண்ட வனும், திருப்பூந்தராய் நகரினை விரும்பி இருப்பிடமாகக் கொண்டவனும் தனது திருவடி விரல் ஒன்றினால் அரக்கனது ஆற்றலை அழித்துப் பின்னர் அவனுக்கு அருள் மிகவும் செய்து நின்ற எமது பிஞ்ஞகனாகிய சிவபிரானேயாவர்.

இராவணது வலியினை அழித்துப் பின் அவனுக்குப் பேரருளும் செய்த இறைவனே திருப்பூந்தராய் காதலித்த வனாவன் என்று கொள்க.

அருள் பெருக்கி நின்ற— அவனுக்கு அருளைப் பெரு மளவில் புரிந்து அதனால் தாம் புகழுடன் நின்ற என்றதாம். அதாவது சிவபிரான் மாட்டுப்பிழை புரிந்தவர்களும் தமது

பிழையினை உணர்ந்து பின்னர் பெருமானைச் சரணடைவரேல் அவர்களது பிழையினைப் பொறுத்துப் பேரருள் புரியும் பெருமான் என்ற பேருண்மை நிலைத்து நிற்கும்படி நின்ற என்று கொள்க.

மத்தம் ஆன இருவர் மருவொணு
அத்தன் ஆனவன் மேவிய பூந்தராய்
ஆள தாக அடைந்துய்ம்மின் நும்வினை
மாளு மாறருள் செய்யுந் தானே. 9

9. செருக்கினால் மயக்கங் கொண்ட பிரம விஷ்ணுக்களாகிய இருவரும் அறிந்து அடைய முடியாத பெருமான் ஆன சிவபிரான் எழுந்தருளிய **திருப்பூந்தராய்த்** தலத்தை அப்பெருமானுக்குத் தொண்டர்களாக அடைந்து நல்ல கதி அடையுங்கள். (அங்ஙனமடைந்தால்) உங்களது வினைகள் யாவும் மாறுமாறு தானே வந்து திருவருள் புரிவார்.

மத்தம் – மயக்கம், தமது ஆற்றலைப் பெரிதாக மதித்துக் கொண்ட செருக்கினால் ஏற்பட்ட மயக்கம் எனக் கொள்க.

பொருத்த மில்சமண் சாக்கியப் பொய்கடிந்(து)
இருத்தல் செய்தபிரான் இமை யோர்தொழப்
பூந்த ராய்நகர் கோயில் கொண்டுகை
ஏந்து மான்மறி யெம்மி றையே 10

10. வேத நெறிகளுக்குப் பொருத்தமில்லாததான சமணர், சாக்கியர் ஆகியோர்களது பொய்யுரைகளைக் கடிந்து, தேவர்கள் தொழும்படி இருந்த பிரான், **திருப்பூந்தராய்** நகரைக் கோயிலாகக் கொண்டு தமது கையில் மான்மறியினை ஏந்தும் எமது இறைவனாகிய சிவபிரானே யாவர்.

மான்மறி—மான்கன்று.

திருப்பூந்தராய் கோயில் கொண்ட மான்கன்று ஏந்தும் கையினையுடைய எமது இறைவரே, புத்தர் சமணர்

ஆகியோரது பொய்யுரைகளைக் கடிந்து இமையோர் தொழ வீற்றிருப்பவர் என்பதாம்.

புந்தி யான்மிக நல்லவர் பூந்தராய்
அந்தம் இல்எம் அடிகளை ஞானசம்
பந்தன் மாலைகொண் டேத்தி வாழும்நும்
பந்த மார்வினை பாறி டுமே. 11

திருச்சிற்றம்பலம்

11. மனத்தினால் மிக்க நல்லவர்களாகிய தொண்டர்கள் வாழ்கின்ற **திருப்பூந்தராய்** மேவிய என்றும் முடிவு இல்லாத எமது கடவுளாகிய சிவபிரானாரைத் திருஞானசம்பந்தனுடைய சொல்மாலையாகிய இப்பதிகம் கொண்டு துதித்து வாழுங்கள். உம்மைப் பந்தித்து நின்ற பழைய வினைகள் யாவும் மாறிவிடும்.

புந்தியான் மிக நல்லவர்—நல்ல மனம் படைத்தவர்கள் சிவத்தொண்டர்கள் எனக்கொள்க.

நமது பழைய வினைகள் யாவும் மாறுதலே இப்பதிகப் படனப் பயன் எனக் கூறியருளினார் எனக் கொள்க.

ஆசிரியர் குறிப்பு: – திருப்பூந்தராய் திருத்தலத்தைப் பாடியருளிய இப்பதிகம் ஈரடி மேல்வைப்பு என்னும் விகற்பச் செய்யுள் வகையைச் சேர்ந்ததாகும். முன் இரண்டு அடிகள் ஒரு எதுகை ஒரு சந்தமாகவும், பின் இரண்டு அடிகள் முன் இரண்டு அடிகளின் மேல் ஒட்டி வைத்தது போல வேறு எதுகையும் வேறு சந்தமும் பெற்று வந்தமையால் ஈரடி மேல் வைப்பு எனப் பெயர் பெற்றது. பின் வைப்பு அடிகள் எல்லாப் பாடல்களிலும் மகுடம் போல ஒன்றாகவே வருதலும் வெவ்வேறாய் வருதலும் உண்டு. இத்திருப்பதிகத்தில் ஒவ்வொரு பாடலிலும் பின் வைப்பு இரு அடிகளும் வேறு வேறாய் வருதல் காண்க. ஒன்றாய் வருதல் வரும் இடத்துக் காட்டப்படும்.

சிவம்

உ

சிவமயம்

சிவனுண்டு பயமில்லை

திருப்பூந்தராய்-4

(சீகாழி)

பண் : காந்தார பஞ்சமம்] [3-ம் திருமுறை

திருச்சிற்றம்பலம்

பந்துசேர்விர லாள்பவளத்துவர்
வாயினுள்பனி மாமதிபோல்முகத்(து)
அந்தமில்புக ழாள்மலைமாதொடும் ஆதிப்பிரான்
வந்துசேர்விடம் வானவரெத்திசையுந்
நிறைந்துவலஞ் செய்துமாமலர்
புந்திசெய்திறைஞ்சிப் பொழிபூந்தராய் போற்றுதுமே. 1

1. பந்து சேர்ந்த விரலையுடையவளும், பவளம் போன்று செந்நிறம் பொருந்திய வாயினையுடையவளும், குளிர்ந்த முழுமதி போன்ற முகத்தையுடைய முடிவில்லாத புகழையுடையவளுமாகிய மலைமகளான உமாதேவியாரொடும் ஆதியாகிய சிவபிரான் வந்து சேர்தலையுடைய இடமாகிய தேவர்கள் எல்லாத் திசைகளிலும் நிறைந்து வலம்செய்து மனத்தினால் நினைந்து உடலினால் வணங்கிச் சிறந்த மலர்களைப் பொழிகின்ற திருப்பூந்தராயை நாம் வணங்குவோமாக.

பந்து சேர் விரலாள் — உமாதேவியார் பந்து ஆடும் பொழுது அப்பந்து அம்மையாரின் கை விரல்களில் வந்து பொருந்துதலால் பந்து சேர்விரலாள் எனக் கூறினர். விரல்—சாதியொருமை, விரல்கள் அனைத்தையும் குறிக்கும்.

பவளம் — நவரத்தினங்களில் ஒன்று. செந்நிறம் உடையது.

துவர் — சிவப்பு. வாயினாள் — சிவந்த உதடுகளை யுடைய வாயினையுடையவள்.

பனி — குளிர்ச்சி; மாமதி — முழுநிலவு.

அந்தமில்புகழ் — அளவுக்குட்படாத புகழ், ஓத ஓத மேலும் வளர்ந்து கொண்டே போகும் புகழ்.

ஆதிப் பிரான் — ஆதியாகிய பிரான். தனக்கு ஒரு முதல் இல்லாது தானே அனைத்துக்கும் முதலாகிய பிரான். பிரான் — பெருமான், தலைவன்.

சேர்வு இடம் — எழுந்தருளிய இடம்.

புந்தி செய்தல் — மனத்தைச் செலுத்துதல். மனம் பற்றுதவழி ஒரு செய்கையால் பயன் இல்லாமை பற்றி புந்தி செய்து இறைஞ்சி எனக் கூறினார். மலர் பொழி — மலர்களைத் தூவுகின்ற. போற்றுதும் — வணங்குவோம்.

காவியங்கருங் கண்ணினாள்கனித்
தொண்டைவாய்க்கதிர் முத்தநல்வெண்ணகைத்
தூவியம்பெடை அன்னநடைச்சுரி மென்குழலாள்
தேவியுந்திரு மேனியோர்பாகமாய்
ஒன்றிரண்டொரு மூன்றொடுசேர்பதி
பூவிலந்தணன் ஒப்பவர்பூந்தராய் போற்றுதுமே. 2

2. கருங்குவளை போன்ற கரிய கண்களையுடையவளும், கொவ்வைக் கனிபோல் சிவந்த வாயினையுடையவளும், ஒளி விடுகின்ற முத்துப்போன்ற வெண்மையான பற்களையுடைய வளும், இறகுகளையுடைய பெண் அன்னம் போன்ற நடை உடையவளும், சுரிந்த மென்மையான கூந்தலையுடையவளு மான தேவியும் திருமேனியில் ஓர் பாகமாகக் கொண்டு இறைவனார் சேர்ந்த பதி, ஒன்றும் இரண்டும் மூன்றும் சேர்ந்த பதியாகிய தாமரை மலர் மேல் வதியும் பிரம்ம தேவனுக்கு ஒப்பான அந்தணர்கள் வாழ்கின்ற திருப்பூந்த ராய் ஆகும். அதனை நாம் வணங்குவோமாக.

காவி — கருங்குவளை மலர். தொண்டைக்கனி — கொவ்வைப்பழம். (செந்நிறமுடையது).

தூவி — அன்னத்தின் இறகு தூவி எனப்படும்.

சுரிகுழல் — புரி குழல் என்றது போல பின்னிய கூந்தல் எனக் கொள்க. மென்குழல் என்றது கூந்தலின் மிருதுத் தன்மை பற்றியாகும்.

ஒன்று இரண்டொரு மூன்றொடு சேர்பதி — $1+2+3$ ஆக 6. அதாவது சீகாழியின் பன்னிரு பெயர்களில் ஆறுவது பெயராக அமைந்த பதியாகிய பூந்தராய் என்பதாம். இப்பொருள் திருத்தருமபுர ஆதீன உரைக்குறிப்பில் கண்டது. இவ்வாறின்றி ஒன்று—குரு, இரண்டு—லிங்கம், மூன்று—சங்கமம் ஆக குரு, லிங்க, சங்கமமாகிய மூவகைத் திருமேனிகளும் விளக்கமாக எழுந்தருளியிருக்கும் பெருமையுடைய பதி எனக் கொள்வது எமது கருத்தாகும். இவை முறையே தோணியப்பர், பிரமபுரிசர், சட்டைநாதர் சந்நிதிகள் ஆகும். அறிஞருலகம் இந்த எமது கருத்தை ஆராய்ந்தருள வேண்டுகின்றோம்.

பையராவரும் அல்குல்மெல்லியல்
பஞ்சின்நேரடி வஞ்சிகொள் நுண்ணிடைத்
தையலாள்ஒரு பாலுடைஎம்மிறை சாருமிடம்
செய்யெலாம்கழு நீர்கமலம்மலர்த்
தேறலூறலிற் சேறுலராதநற்
பொய்யிலாமறை யோர்பயில்பூந்தராய் போற்றுதுமே 3

3. படத்தையுடைய பாம்பு போன்ற அல்குலையுடைய மெல்லியலும், பஞ்சினையொத்த மென்மையான அடியையும், வஞ்சிக்கொடி போன்ற நுண்மையான இடையையும் உடைய தையலாளுமாகிய உமாதேவியாரை ஒரு பக்கத்திலே உடைய எமது இறைவனார் விரும்பியெழுந்தருளிய இடம், வயல்களிலெல்லாம் செங்கழுநீர்ப் பூக்களும், தாமரைப்பூக்களும் ஆகிய இம்மலர்களின் தேன் ஊறுதலால்

ஏற்பட்ட சேறு உலராத சிறப்பும், பொய்மையில்லாத மறையோர்கள் பயிலுதலையுமுடைய திருப்பூந்தராய் ஆகும். அதனை நாம் வணங்குவோமாக.

பாம்பின் படத்தை அல்குலுக்கும் (மறைவுத் தானம்) வஞ்சியென்னும் கொடியை இடைக்கும் உவமையாகக் கூறுதல் கவிமரபு.

செய்—வயல்; **கழுநீர்**—செங்கழுநீர்ப்பூ.

கமலம்—தாமரை; **தேறல்**—தேன்.

ஊறலில் — ஊறிப்பாய்தலால்.

பொய்யிலா மறையோர் — 'சத்யம் வத' (உண்மையே பேசு) என்பது மறைவாக்காதலின் பொய்மையிலாதவராக இருத்தலே மறையவர்க்கு இலக்கணம் என்பதைத் தெளிவு படுத்த பொய்யிலா மறையோர் என்று கூறியருளினார்.

பயில் பூந்தராய்—பயிலும் பூந்தராய். பயிலுதல் இங்கு வசித்தல் என்னும் பொருளில் வந்தது.

முள்ளிநாண்முகை மொட்டியல்கோங்கின்
அரும்புதேன்கொள் குரும்பைமூவாமருந்(து)
உள்ளியன்றபைம்பொற் கலசத்தியல் ஒத்தமுலை
வெள்ளிமால்வரை அன்னதோர்மேனியின்
மேவினார்பதி வீமருதண்பொழிற்
புள்ளினந்துயில் மல்கியபூந்தராய் போற்றுதுமே 4

4. தாமரையின் புதிய அரும்பு, மொட்டாகப் பொருந்தும் கோங்கு, ஊறுகின்ற தேனை உள்ளே கொண்ட இளநீர்க்காய், அமிர்தம் உள்ளே அடங்கிய பசும்பொற்கலசம் இவற்றின் தன்மையை ஒத்த திருமுலைகளையுடைய உமாதேவியாரை வெள்ளிமலை போன்றதொரு தனது திருமேனியில் ஒரு பாகமாகக் கொண்டு மேவியவராகிய சிவபிரானாரது

பதி, மலர்கள் நிறைந்த குளிர்ச்சி மிக்க சோலைகளில் புள்ளினங்கள் துயிலுதல் மிகுந்த திருப்பூந்தராய் ஆகும். அப்பதியினை நாம் வணங்குவோமாக.

முள்ளி—தாமரைத் தண்டின் மீது உள்ள சுரசுரப்பு முள்போலத் தோன்றுவதால் முள்ளி எனத் தாமரையினைக் கூறினர்.

தாமரை முகை, கோங்கின் மொட்டு, இளநீர்க் குரும்பை, அமிர்தம் உள்ளியன்ற பொற்கலசம் இவைகளைக் கொங்கைகளுக்கு உவமை கூறுதல் கவிமரபு. இவை ஒவ்வொன்றின் இயல்பையும் அதில் காணலாம். குரும்பையில் இளநீர் ஊறுதலைத் 'தேன் அரும்பும்' எனக் கூறினர் போலும். மூவாமருந்து — மூவாமைக்குக் காரணமான மருந்து; அமிர்தம். இது அடங்கிய பொற்கலசம் போன்ற முலை எனக் கொள்க. இவ்வாறு பல பொருள்களை ஒரே பொருளுக்கு உவமையாகக் கூறுதல் பல்பொருள் உவமை எனப்படும்.

வீ—மலர்; தண்பொழில்—குளிர்ச்சி மிக்க சோலைகள். புள்ளினம் சோலைகளில் தூங்குதல் மிகுந்த பதி என்றதாம். தமக்கு வேண்டிய உணவு முதலிய வகைகளெல்லாம் எளிதிற் கிடைத்தலால் புள்ளினம் கவலையின்றித் தூங்குகின்றன. இது திருத்தருமபுர உரைக் குறிப்பில் கண்டது.

பண்ணியன்றெழு மென்மொழியாள்பகர்
கோதையேர்திகழ் பைந்தளிர்மேனியோர்
பெண்ணியன்றமொய்ம்பிற் பெருமாற்கிடம் பெய்வளையார்
கண்ணியன்றெழு காவிச்செழுங்கழி
நீலமல்கிய காமருவாவிநற்
புண்ணியருறையும் பதிபூந்தராய் போற்றுதுமே 5

5. பண்ணின் இசையோடு எழுகின்ற மென் மொழியாளும், சிறப்பாகச் சொல்லப்படுகின்ற கூந்தலையும் பசுந்

தளிர் போன்ற திருமேனியையுடையவளுமான உமாதேவியார் ஒருபால் கூடிய தோளையுடைய சிவபெருமானுக்கு இடம், அடுக்கிய வளையல்களையுடைய பெண்களது கண்களைப் போன்ற கரிய நிறம் பொருந்திய செழுமையான கருநீல மலர்கள் மிகுந்த அழகிய குளங்கள் நிறைந்த, நல்ல சிவ புண்ணியச் செல்வர்கள் வசிக்கின்ற பதியாகிய திருப்பூந்தராய் ஆகும். அதனை வணங்குவோமாக.

உமாதேவியாருடைய குரல் இசையின் இனிமையுடனும் மென்மையுடனும் உள்ளது. கூந்தல் ஞானப்பூங்கோதை என்று சிறப்பித்துச் சொல்லப்படுவது. திருமேனி தளிர் போன்று மிருதுவானது. அத்தகைய தேவியை ஒருபாற் கொண்ட மொய்ம்பினையுடைய பெருமானுக்கு இடம் காமரு வாவி நற் புண்ணியர் உறை பதி பூந்தராய். அதனைப் போற்றுதும் எனக்கொள்க.

கருநீல மலரைப் பெண்களின் கண்களுக்கு உவமை கூறுதல் வழக்கம். இங்குப் பெண்களின் கண்களை நீலமலருக்கு உவமை கூறிய நயம் இன்புறுதற்குரியது.

மொய்ம்பு —தோள் எனப் பொருள்படினும் சரீரம் முழுமையுமே குறித்துச் சொன்னதாகக் கொள்ளினும் இழுக்காகாது.

புண்ணியர் — சிவ புண்ணியங்களைச் செய்தவர். பல புண்ணியங்களைச் செய்தவர்களும் உறையும் பதி எனவும் கொள்ளலாம்.

வாணிலாமதி போல்நுதலாள்மட
மாழையொண்கணாள் வண்டரளந்நகை
பாணிலாவிய இன்னிசையார்மொழிப் பாவையொடும்
சேணிலாத்திகழ் செஞ்சடையெம்மண்ணல்
சேர்வதுசிகரப் பெருங்கோயில்சூழ்
போணிலாநுழையும் பொழிற்பூந்தராய் போற்றுதுமே. 6

6. ஒளி பொருந்திய நிலவினை வீசுகின்ற பிறைச் சந்திரனைப் போன்ற நெற்றியையுடையவளும், மாம்பிஞ்சு

(மாவடு) போன்ற ஒள்ளிய கண்களையுடையவளும், வளமை பொருந்திய முத்துக்களையொத்த வெண் பற்களையுடையவளும், பாட்டில் பொருந்திய இனிய இசை போன்ற மொழியினைப் பேசுகின்றவளுமான பாவையாகிய உமாதேவியாரோடு, வானத்தில் சஞ்சரிக்கும் நிலாவானது திகழ்கின்ற சிவந்த சடையினையுடைய எமது தலைவராகிய சிவபெருமான் வந்து சேர்வது, சிகரத்துடன் கூடிய பெருங்கோயிலைச் சூழ்ந்த பிறைச்சந்திரன் நுழையும் பொழில்களையுடைய திருப்பூந்தராய் ஆகும். அதனை நாம் வணங்குவோம்.

வாள்+நிலா—வாணிலா, ஒளி வீசுகின்ற நிலா. பெண்களின் நெற்றிக்கு அஷ்டமி சந்திரனை (பாதி நிலவு) உவமையாகக் கூறுதல் மரபு.

பாணிலாவிய- பாண்+நிலாவிய. பாட்டில் பொருந்திய.

சேணிலா—சேண்+நிலா. சேண் என்பது ஆகாயம் என்ற பொருளில் வந்தது.

போணிலா — போழ்+நிலா. போழ் என்னும் சொல் பிளவு என்று பொருள் படுதலால் போழ் நிலா என்பது பிளவுபட்ட நிலா அதாவது பிறைச்சந்திரன் என்ற பொருளைத் தரும்.

காருலாவிய வார்குழலாள்கயற்
கண்ணினுள்புயற் காலொளிமின்னிடை
வாருலாவிய மென்முலையாள்மலை மாதுடனாய்
நீருலாவிய சென்னியன்மன்னி
நிகருநாமம்முந் நான்குநிகழ்பதி
போருலாவெயில் சூழ்பொழிற்பூந்தராய் போற்றுதுமே. 7

7. மேகத்தின் நிறம் பொருந்திய நீண்ட கூந்தலை உடையவளும், கயல்மீனை ஒத்த கண்களையுடையவளும், மேகங்கள் வெளிவிடுகின்ற ஒளியாகிய மின்னல் போலும் இடையினையுடையவளும், கச்சு பொருந்திய மென்மையான திருத்தனபாரங்களையுடையவளுமாகிய மலை மாதாகிய உமாதேவியாருடன் கங்கை பொருந்திய தலையையுடையவ

ளுகிய சிவபிரான் நிலை பெற்றிருக்கும் பதி, தமக்குத்தாமே ஒப்பான திருப்பெயர்கள் பன்னிரண்டுடன் திகழ்கின்ற பதி, போர்ப் பொறிகள் பொருந்திய மதில்கள் சூழ்ந்த பொழில் நிறைந்த திருப்பூந்தராய் ஆகும். அப்பதியினை நாம் வணங்குவோமாக.

மலைமாதுடனாய் நீருலாவிய சென்னியன் மன்னி நிகழ் பதி, நிகரும் நாம முந்நான்கு நிகழ் பதி என ஈரிடத்தும் இயைத்துப் பொருள் கொள்க.

முற்காலத்தில் மதிற்சுவர்களில் போர்ப் பொறிகள் வைக்கப்பட்டிருக்கும். அவை பகைவர் வந்தால் அவர்களை அழிக்க மதிற்சுவர்களின்மேல் இயங்கிக் கொண்டிருக்கும். அப்பொறிகளையே இங்கு போர் உலாவிய என்று கூறியருளினார்.

காசைசேர்குழலாள் கயல்ஏர்தடங்
கண்ணிகாம்பன தோள்கதிர்மென்முலைத்
தேசுசேர்மலை மாதமருந்திரு மார்பகலத்(து)
ஈசன்மேவும் இருங்கயிலையெடுத்
தானையன்றடர்த் தான்இணைச்சேவடி
பூசைசெய்பவர் சேர்பொழிற்பூந்தராய் போற்றுதுமே. 8

8. காயாம்பூ போன்ற கருநிறமுடைய கூந்தலையுடையவளும், மீனைப் போன்ற அழகிய அகன்ற கண்களையுடையவளும், மூங்கில் போன்ற தோளையும் கதிர்வீசும் வெண்மையான திருத்தனபாரங்களின் ஒளியையுமுடைய மலைமகளான பார்வதி தேவியார் ஒருபால் அமரும் அழகிய அகன்ற மார்பினையுடைய சிவபெருமான் எழுந்தருளியிருக்கும் பெரிய கயிலைமலையினைப் பெயர்த்தெடுத்தலைச் செய்ய முயன்றவனை இராவணனை அந்நாளில் அடர்த்த அச்சிவபெருமானின் சிவந்த திருவடிகள் இரண்டையும் பூசை செய்பவர்கள் வந்து சேர்கின்ற பொழில்கள் சூழ்ந்த திருப்பூந்தராயை வணங்குவோமாக.

காசை சேர் — காயாம்பு போன்ற; சேர் இங்கு உவம வாசகம். காயாம்பூ என்பது நீலநிறமுடைய பூக்கள் மலரும் ஒரு மரத்தின் பூவாகும். நீலமும் கருப்பும் பேத மின்றிச் சொல்லும் மரபு பற்றி அதனைக் கரிய குழலுக்கு உவமையாகக் கூறினர்

காம்பு — மூங்கில்; தேசு — ஒளி.

மார்பு அகலம் — அகலம் என்ற சொல் மார்பு, விசாலம் முதலிய பொருள்களைத் தரும். விசாலமான மார்பு எனக் கொள்க.

அடர்த்தான் — கால் விரலினல் நெருக்கியது பற்றி இங்ஙனம் கூறினர்.

இணைச் சேவடி — இணை என்ற சொல் இங்கு இரண்டு என்ற பொருளைக் குறிக்கும். எனவே இரண்டு சிவந்த திரு வடிகள் எனக் கொள்க.

கொங்குசேர்குழலாள் நிழல்வெண்ணகைக்
கொவ்வைவாய்க்கொடி யேரிடையாள்உமை
பங்குசேர்திரு மார்புடையார்படர் தீயுருவாய்
மங்குல்வண்ணனும் மாமலரோனும்
மயங்கநீண்டவர் வான்மிசைவந்தெழு
பொங்குநீரின் மிதந்தநற்பூந்தராய் போற்றுதுமே. 9

9. மணம் பொருந்திய கூந்தலையுடையவளும், ஒளி பொருந்திய வெண்மையான பற்களையுடையவளும், கொவ் வைக் கனி போன்ற வாயினையுடையவளும், பூங்கொடி போன்ற அழகிய இடையையுடையவளுமான உமாதேவி யார் ஒரு பங்கிலே சேர்கின்ற அழகிய மார்பினையுடைய வரும், மேகநிறமுடைய திருமாலும் தாமரை மலரில் தோன்றிய பிரமதேவனும் (அடிமுடியறியாது) மயங்கும்படி படர்கின்ற தீயின் உருவாய் நீண்டு எழுந்தவருமான சிவ பிரானது இடமாகிய, ஆகாயம் வரை வந்து பொங்கி எழுந்ததான ஊழி வெள்ள நீரிலே மிதந்த நற்பதியான திருப்பூந்தராயை வணங்குவோமாக.

உமை பங்கு சேர் திருமார்புடையார், படர்தீயுருவாய் மங்குல் வண்ணனும் மாமலரோனும் மயங்க நீண்டவர் பூந்தராய், பொங்கு நீரின் மிதந்த நற்பூந்தராய் என ஈரிடத்தும் இயைத்துப் பொருள் கொள்ளல் சிறப்புடைத்து, ஊழி வெள்ளத்தில் இத்தலம் ஆழாது மிதந்தது என்பது தலவரலாற்றுக் குறிப்பு.

கலவமாமயி லார்இயலாள் கரும்(பு)
அன்னமென்மொழி யார்கதிர்வாள்நுதற்
குலவுபூங்கழ லாள்உமைகூறனை வேறுரையால்
அலவைசொல்லுவார் தேரமண்ஆதர்கள்
ஆக்கினான்றனை நண்ணலும்நல்கும்நற்
புலவர்தாம்புகழ் பொற்பதிபூந்தராய் போற்றுதுமே. 10

10. தோகையினையுடைய அழகிய மயில் போன்ற சாயலையுடையவளும், கரும்பு போன்ற இனிமையுடைய மென்மொழியினையுடையவளும், கதிர் வீசுகின்ற ஒளியுடைய நெற்றியுடைவளும், குலவுகின்ற பூக்களைச் சூடிய கூந்தலையுடையவளுமான உமாதேவியை ஒரு கூறாகக் கொண்ட சிவபெருமானை, மாறுபட்ட சொற்களால் கூறத் தகாத சொற்களைச் சொல்லுபவர்களாக புத்தர்கள் சமணர்கள் ஆகிய அறிவிலிகளை ஆக்கினவனாகிய பெருமானை நண்ணியதும் உடனே அருளை வழங்குகின்ற, நல்ல புலவர்கள் புகழ்கின்ற அழகிய பதியாகிய திருப்பூந்தராயை வணங்குவோமாக.

ஆக்கினான்தனை நண்ணலும் நல்கும் பொற்பதி பூந்தராய், நற்புலவர் தாம் புகழ் பொற்பதி பூந்தராய் என ஈரிடத்தும் கூட்டிப் பொருள் கொள்ளல் சிறப்புடைத்து.

சமணர்கள், புத்தர்கள் ஆகியோர் சிவபிரானைக் கூறத் தகாத வார்த்தைகளால் பழித்துரைக்கும் கொள்கை உடையவர்கள். இவர்களது இத்தகைய பிறப்பு முன்னை வினைப் பயனால் ஏற்பட்டதாகும். உயிர்களின் வினைக்கு

டாகவே இறைவன் பிறப்பினை உண்டுபண்ணுவதால் அவ்வாறு சமணரும் புத்தரும் பழித்துரைக்கும்படி அவர்களை பிறக்கச் செய்தவனும் அப்பெருமானேயாதலின் அவர்கள் செய்வது கன்மவசத்தாலெனினும் அதுவும் சிவன் செயலே எனக் கூறியருளினர் என்று கொள்க.

தேம்பல்நுண்ணிடை யாள் செழுஞ்சேலன
　　கண்ணியோடண்ணல் சேர்விடம்தேனமர்
பூம்பொழில்திகழ் பொற்பதிபூந்தராய் போற்றுதுமென்(று)
ஓம்புதன்மையன் முத்தமிழ்நான்மறை
　　ஞானசம்பந்தன் ஒண்டமிழ்மாலைகொண்(டு)
ஆம்படி இவை ஏத்தவல்லார்க்கடை யாவினையே. 11

திருச்சிற்றம்பலம்

11. இளைத்த சிறிய இடையினையுடையவளும், செழுமையான மீன் போன்ற கண்களையுடையவளுமான அம்பிகையுடன் அண்ணலான சிவபிரான் எழுந்தருளிய இடமாகிய, தேன் பொருந்திய பூம்பொழில்கள் சூழ்ந்த அழகிய பதியாகிய திருப்பூந்தராயைப் போற்றும் (வணங்குவோம்) என்று அப்பதியின் பெருமையினைப் போற்றி வளர்க்கும் தன்மையினனான முத்தமிழ், நான்மறை இரண்டிற்கும் உரிய திருஞானசம்பந்தனது ஞானம் மிக்க தமிழ் மாலையாக அமைந்த இப்பாடல்களைக் கொண்டு தமக்கு ஆக்கம் உண்டாகும்படி துதிக்க வல்லவர்களுக்கு வினைகள் வந்து சார மாட்டா.

தேம்பு நுண்ணிடை என்பதில் தேம்புதல் இங்கு இளைத்தல் என்ற பொருளில் வந்தது.

ஓம்புதல் — பாதுகாத்தல், வளர்த்தல் என்ற பொருள்களைத் தரும். ஒண்மை—அறிவு; இங்குச் சிவஞானம் எனக் கொள்க.

முத்தமிழ் நான்மறை— இயல், இசை, நாடகம் என்ற மூன்று வகையான தமிழுக்கும், ருக், யஜுர், சாமம்,

அதர்வணம் என்ற நான்கு வேதங்களுக்கும் உரிமையுள்ளவர் என்பது கருத்து. இத்தகைய சிறப்புடைய திருஞான சம்பந்தரின் வாக்கு வேதமேயாதலின் அவ்வாக்கில் வந்த இப்பாடல்கள் பத்தியையும் கொண்டு துதிக்க வல்லார்க்கு இது வரை பல பிறவிகளில் அனுபவித்துக் கழித்தது போக எஞ்சிய வினையும், இனி மேல் வரக்கடவதாகிய வினையும் வந்து அடைய மாட்டா. பிராரப்தம் என்ற இப்பிறவிக் குரிய வினை அனுபவித்துக் கழிக்கப்படுதலால் இனி அனு பவிக்க வினை இன்றாகலின் பிறப்பும் இல்லை எனக் கொள்க. 'வினைப்போகமே ஒரு தேகங்கண்டாய்' என்ற பட்டினத்தடி களின் வாக்கும் இங்கு நோக்குக.

இத்திருப்பதிகத்து ஒவ்வொரு திருப்பாடலிலும் உமை யம்மையின் உருவச் சிறப்பைப் பாடி அவரை ஒரு பங்கிலே கொண்டவன் என்று மாதியலும் பாதியனாக இறைவரைச் சிறப்பித்து அப்பெருமான் உறையும் பதி திருப்பூந்தராய் என்று தலப் பெருமையைக் கூறி அதனை வணங்குவோம் என்று அருளிச் செய்த திறம் காண்க. வினைகள் வந்து அடைய மாட்டாமையே இப்பதிகப்பயனாகக் கொள்க.

சுவாமி—பிரமபுரீச்வரர் [தேவி—திருநிலைநாயகி
தோணியப்பர்] சிவம் பெரியநாயகி

(72-ம் பக்கத் தொடர்ச்சி)

திருப்பாடல் முதற்குறிப்பகராதி முற்றிற்று.

சிவமயம்

சிவனுண்டு பயமில்லை

திருப்பாடல் முதற்குறிப்பகராதி

(தொடர்ச்சி 71-பக்கம்)

உ

சிவமயம்

சிவனுண்டு பயமில்லை



யத்யத் கர்ம கரோமி
தத்ததகிலம்
சம்போ தவாராதனம்

உ

சிவமயம்

சிவனுண்டு பயமில்லை

வாழ்த்து

திருச்சிற்றம்பலம்

வாழ்க அந்தணர் வானவர் ஆனினம்
வீழ்க தண்புனல் வேந்தனும் ஓங்குக
ஆழ்க தீயதெல்லாம் அரன் நாமமே
சூழ்க வையகமும் துயர் தீர்கவே.

திருச்சிற்றம்பலம்

—திருஞானசம்பந்தர் அருளியது

மொழிக்கு மொழி தித்திக்கும்

மூவர் தமிழ் மாலை

(சம்பந்தர், அப்பர், சுந்தரர் அருளிச் செய்த தேவாரத் திருப்பதிக வெளியீடு)

பன்னிரு திருமுறைகளில் முதல் ஏழு திருமுறைகளான தேவாரத் திருப்பதிகங்களை பொழிப்புரை, விசேடவுரை, பதிக வரலாறு, தலவரலாறு, புராண வரலாறு முதலிய உரை விசேடங்களுடன் 108 தமிழ் மாலைகளாகப் பிரசுரித்துச் சிவபெருமானின் 108 திருநாமங்கள் ஒவ்வொன்றுக்கும் ஒரு தமிழ் மாலையாகச் சமர்ப்பிக்கும் இந்த திட்டத்தில் இத்துடன் பத்து தமிழ் மாலைகள் வெளிவந்துள்ளன. விலை விவரம்:

	ரூ-பை
முதல் ஆறு மாலைகள் ஒவ்வொன்றும்	... 2-00
ஆறு தமிழ்மாலைகளும் சேர்த்து	.. 10-00
7 வது தமிழ் மாலை முதல்	
ஒவ்வொரு தமிழ் மாலையும்	... 3-00
ஒவ்வொரு ஆறு தமிழ் மாலைகளும்	... 15-00
1 முதல் 108 தமிழ் மாலைகளுக்கும்	
முன்பண உதவிச் சலுகை விலை	...158-00

சலுகை விலை முன்பணமாகச் செலுத்தப்பட வேண்டும். ஒரு ஆண்டுக்குள் தவணைகளாகவும் செலுத்தலாம்.

முன்பணம் கிடைத்தவுடன் இதுவரை பிரசுரமான தமிழ் மாலைகள் உடனடியாக அனுப்பப்பட்டு மற்றவை பிரசுரமானதும் உடனுக்குடன் அனுப்பி வைக்கப்படும்.

உரையாசிரியர்—பதிப்பாசிரியர்
ஆங்கிரஸ S. வேங்கடேச சர்மா
5, டெலிபோஸ்ட் காலனி குறுக்குத் தெரு
மேலமாம்பலம், சென்னை-600033.

Printed at : Elango Achukoodam, 166, R.H. Road, Ms-4.